14வது வருடத்தில்

# விளம்பரம் ™
VLAMBARAM ™

☎ 416-282-8059 📠 416-282-4978

வாசித்துவிட்டீர்களா?

உலக தமிழோசை
7வது இதழ்
சிறப்பு விலை
$ 1 . 5 0
மட்டுமே

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 14 | பாலம் 15 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2004


ஏதன்ஸ் நகரில் ஒலிம்பிக் 2004 06


ஜப்பானியர்களும் தலை வணங்கலும் 08


எம்மிடம் இருக்கும் பகட்டுத் தன்மை 09

ஆகஸ்ட் 14, 04 சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா

## எதிர்காலத் தமிழ் தலைமுறை பெயரற்ற, மொழியற்ற, வேரற்ற சமூகமாகி விடுமா?

*பண்பாடு கலாச்சாரம் பற்றிய பல மாயைகள் எம்மிடம் உள்ளன. இரண்டுமே வேறு வேறானவை என்றாலும் பொதுவழக்கில் இந்த இரண்டு சொற்களையும் ஒன்றாகவே நாம் பயன்படுத்துகிறோம். சால்பு என்பது இன்னொரு பொருத்தமான சொல்லாகும். பண்பாடு என்பதன் மூலவிசையே மாற்றம் என்பதாகும். தமிழ் பண்பாடு என்று இன்று நாங்கள் எதைச் சொல்லுகின்றோம் என்பதற்கான கேள்விக்கு பல்வேறு விடைகள் கிடைக்கின்றன. இந்த விடைகளில் எது சரி? எது பிழை? என்று வார்த்தைகளில் அடக்கிவிட முடியாது. மாறாத ஒரு பண்பாடு என்று இருந்தால், நாம் இப்போதும் 'விதவை'களை 'உடன் கட்டை' ஏற்றி விடும் நிலையில் இருப்போம். அல்லது அவர்களின் தலையை மழித்து, வெள்ளை ஆடைகளை அணிவித்து, அவர்களை வீட்டுச் சிறையில் வைத்திருக்க வேண்டிய ஒரு கட்டாயம் எங்களுக்கு இருந்திருக்கும்.*

*பண்பாட்டுக்கு பல மூலவேர்கள் உள்ளன. மொழி, சுற்றுச் சூழல், இயற்கை, கலைகள், சடங்குகள், நாளாந்த வாழ்வு மற்றும் அறிவு வளம் என்பன அவற்றுட் சிலவாகும். எனினும் புதுமைகளை ஏற்றுக் கொள்ளும் பாங்கும், மரபிலிருந்தும், தொன்மையிலிருந்தும் சமத்துவத்தையும், முன்நோக்கிய பார்வையையும் வலியுறுத்துகின்ற கூறுகளைத் தெரிந்து எடுத்துப் பேணுகின்ற வல்லமையும்தான் எந்தவொரு பண்பாட்டினதும் முன் நோக்கிய பாய்ச்சலுக்கு வழி வகுக்கும் என்பது எனது கருத்து. இவை எவ்வளவு தூரம் ஒரு சமூகத்தில் பலமாக இருக்கின்றதோ அவ்வளவு தூரத்திற்கு அது ஆளுமை மிக்க பண்பாட்டைக் கொண்டிருக்கும் என்று நாங்கள் சொல்லலாம்.*

*தமிழ்ச் சமூகங்கள் உண்மையில் பல உள்ளன. அவற்றுள்ளும் சாதி, பால் நிலை, பிரதேசம் சார்ந்த படிமுறை*

தொடர்ச்சி 9ம் பக்கம்

# மீண்டும் பேச்சுவார்த்தை

## புலிகள்–சந்திரிகா பேச ஐ.தே.க ஆதரவு, ஜே.வி.பி முறுகுகின்றது.

'தமிழீழ விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசு தயார் என்றும் இதற்கான நிகழ்சி நிரல் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது' இவ்வாறு ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ளார்.



'புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால சபையை முன்வைத்து சந்திரகா பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால் அதற்கு எவ்வித நிபந்தனையும் இன்றி ஆதரவு வழங்குவோம்' என்று ஐ.தே.க வும் திடீரேன அறிவித்துள்ளது. ஐ.தே.க சார்பில் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னைநாள் அமைச்சருமான ராஜித சேனாரத்ன செய்தியாளர்களிடம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

மேலும் ராஜித கூறுகையில் 'இலங்கையில் சமாதான முயற்சிக்கு ஜே.வி.பியினர் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றனர். இவர்கள் இலங்கை ஜனாதிபதியை மிரட்டிக் கொண்டே இருக்கின்றனர். இந்த மிரட்டல்களுக்குப் பயந்து சமாதான முயற்சிகளிலிருந்து ஜனாதிபதி பின்வாங்கக் கூடாது. ஜே.வி.பி அரசை கவிழ்க முயற்சி செய்தால் நாம் அரசுக்கு நிபந்தனை அற்ற வகையில் ஆதரவு வழங்குவோம்' என்று தெரிவித்துள்ளார்.

இதே சமயம் தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு புலிகளுடன் பேசினால் தாம் கூட்டமைப்பை விட்டு வெளியேறி விடுவோம் என்று மறுபடியும் ஜே.வி.பி மிரட்டியுள்ளது. இக் கட்சியின் பிரச்சாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவண்ஸ் கேகாலை நகர மண்டபத்தில் நிகழ்ந்த நாட்டுப்பற்றாளர்களின் தேசிய இயக்கத்தின் ஐந்தாவது வருட விழாவில் உரையாற்றும் போதே இந்த எச்சரிக்கையை அரசுக்கு விடுத்துள்ளார்.

*தொடர்ச்சி 22ம் பக்கம்*

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC



9.00A.M - 9.00P.M
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
4 1 6 - 2 6 4 - 3 2 3 2
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

Singapore Communication
Since 1991

$40.00/ Month
• Up to 700 Min Free
• Evenings & Weekends Free
• 2 Year contract
••• Offer Ends June 30. 04 •••

Family plan $40.00/ M/2 phones
•100 Min Daytime to share /Weekend Free
• Upgradable for Free Evening with more Min 2500 Min Free
• between 2 phones V/M, C/W, C/C Free
• Buy one phone as low as $49.99 & 2nd Free
••• 2 year contract

More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு



மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)

• Auto • Disability • Travel & Business
• Home • Mutual Fund
• R.R.S.P • Group Insurance
• Life • Child Education



416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...

ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி



DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# கடனும், கத்தியும்




கடனும், கத்திக்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? சம்பந்தம் இருக்கின்றது. கடன் கத்தியைப் போல, சரியான முறையில் உபயோகித்தால் உபயோகிப் பவருக்கு நன்மையைத் தரும். சரியற்ற முறையில் உபயோகித்தால் துன்பத் தையே தரும்.

கடன் அல்லது கிரடிட் இன்றே வேண்டியதை வாங்க உதவுகின்றது. பணத்தை நாளை கொடுக்கலாம். இந்தச் சேவைக்கு நீங்கள் கொடுக்கும் பணத திற்கு பெயர்தான் "வட்டி". நாளைக்கு நீங்கள் கொடுப்பது நிச்சயமா? சந்தேகம் தான். ஒருவேளை, வேலை இல்லாமல் போனால் நீங்கள் கடனைத் திருப்பிக் கொடுக்க நினைத்தாலும் கொடுக்க இல்லாமல் போகலாம்.

உங்கள் சூழ்நிலை, எண்ணம் எல்லாம் எதிர்காலத்தில் எப்படி இருக்கும்? இதை கடன் கொடுக்கும் நிறுவனங்கள் தீர்மானிக்கின்றன. உங்களுக்குக் கடன் கொடுப்பதில், "ரிஸ்க்" அதிகம் இருப்ப தாக கடன் கொடுக்கும் நிறுவனம் தீர்மானித்தால் வட்டி கூடும். பொதுவான விதி என்னவென்றால் "ரிஸ்க் கூடினால் வட்டியும் கூடும், ரிஸ்க் குறைந்தால் வட்டியும் குறையும்". நீங்கள் கடன் பெறும் தகுதியை நிறுவனங்கள் எப்படி தீர்மானிக்கின்றன. ஆங்கிலத்தில் 3C என்பார்கள். அதாவது, Character (நடத்தை) Capacity (பெறுமதி அல்லது தகுதி) Collateral (கூடுதலான சொத்து), இவற்றின் விரிவை இப்போது பார்ப்போம்.

**நடத்தை**:- உங்கள் நடத்தையை அளவிடுவதன் மூலம் உங்களுக்கு கடனைத் திருப்பிச் செலுத்துவதில் உள்ள ஆர்வத்தை கடன்கொடுக்கும் நிறுவனங்கள் அளவிடுகின்றன. இதற்காக ஆராயக்கூடிய காரணிகள்.

- வேலையின் நிரந்தரத் தன்மை.
- நிரந்தர இருப்பிடம்
- வீடு சொந்தமா, வாடகையா?
- கடந்த கால நல்ல கடன் சரித்திரம்
- நேர்மை, நாணயம்
- உயர்கல்வி

**பெறுமதி**:- உங்கள் பெறு மதியை அளவிடுவதன் மூலம், கடனைத் திருப்பிச் செலுத்த உங்களுக்கு எந்த அளவு வசதி அல்லது வாய்ப்பு உள்ளது என்று கடன் கொடுக்கும் நிறுவனங்கள் அளவிடுகின்றன. இதற்காக ஆராயக்கூடிய காரணிகள்.

- உங்களின் தற்போதைய வருமானம்
- எதிர்காலத்தில் வரக்கூடிய வருமானம்
- கடந்த கால வேலைச் சரித்திரம்
- தற்சமயம் இருக்கும் (மற்ற) கடன்கள்
- உங்களின் மாதாந்திர செலவுகள்
- உங்களின் வீட்டுவாடகை அல்லது வீட்டுக்கடன் தவணைப்பணம்.

**உங்கள் சூழ்நிலை, எண்ணம் எல்லாம் எதிர் காலத்தில் எப்படி இருக்கும்? இதை கடன் கொ டுக்கும் நிறுவனங்கள் தீர் மானிக்கின்றன.**

**கூடுதலான சொத்து**:- உங்க ளிடமிருக்கும் கூடுதலான சொத்துக் களை மதிப்பிடுவதன்மூலம், உங்களின் நிகரப்பெறுமதியும், கடனுக்குப் பிணை யாக கூடுதல் சொத்துக்கள் எதையாவது உங்களிடமிருந்து பெறமுடியுமா என்றும் தீர்மானிக்கப்படுகின்றது. இதற்காக ஆராயப்படும் காரணிகள்.

- உங்கள் சொத்துக்கள் விபரம்
- உங்கள் கடன் விபரம்
- நிகரச் சொத்து (சொத்து - கடன்கள்)
- கடனுக்குப் பிணையாகக் கொடுக்கத் தகுந்த சொத்துக்கள் உள்ளனவா?
- கூடுதலான சொத்துக்கள் எதையாவது பிணையாகப் பெறமுடியுமா?

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

**அதிகப்படியான கார்டுகள் அதிகப்படியான கஷ்டங்களைத் தான் தரும்.**

இவ்வளவு கடன்கொடுக்கும் நிறுவனங் கள், நீங்கள் எவ்வளவு சம்பாதிக் கிறீர்கள், எவ்வளவு சேமிக்கின்றீர்கள், உங்கள் கடன் சரிதம் எத்தகையது என்பன போன்றவற்றின் அடிப்படை யிலேயே, உங்களுக்கு கடனை நுகர வாய்ப்புத் தருகின்றன.

இதற்காக வசூலிக்கப்படும் வட்டி வருடத்துக்கு 9 சதத்திலிருந்து 30 சதம் வரை இருக்கக் கூடும். எனவே வட்டியைக் கவனித்தே கடனைப் பெற வேண்டும்.

முழுக்கடனையும் கிரிடிட் கார்ட்டில் திரும்பச் செலுத்த முடியவில்லை என்றால் குறைந்த பட்சம் 5 சதமாவது திருப்பிச் செலுத்த வேண்டும். உங்கள் கிரிடிட் கார்டை நீங்கள் மட்டுமே உபயோகிக்க வேண்டும். வட்டியையும் சேர்த்துப் பார்க்கும் போது வாங்கிய பொருள், அதற்கு பொறுமதி உடையது தானா என்று தீர்மானிக்க வேண்டும். கடனை உபயோகிக்கு முன் இது தேவைதானா என்று உங்களுக்குள் ஒரு கேள்வியை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். மாதா மாதம் கிரிடிட் கார்டுகளுக்கு முழுத்தொகையையும் கட்டி விடுவதே நல்லது. 600க்கும் மேற்பட்ட கிரிடிட் கார்டுகள் வழக்கில் உள்ளன. அவை எல்லாமே உங் களுக்குத் தேவையில்லை. அதிகப்படியான கார்டுகள் அதிகப்படி யான கஷ்டங்களைத் தான் தரும்.

**பெரி. முத்துராமன்**

வங்கிகள், கிரிடிட் யூனியன், டிலஸ்ட் கம்பெனிகள் போன்றவை தரும் கிரிடிட் கார்டுகளுக்கு பொதுவில் வட்டி குறைவாக இருக்கும். கனடியன் ரயர் (Canadian Tire), ஹட்ஸன் பே (Hudson Bay), சீயர்ஸ் (Sears), ஸெலஸ் (Zellers) போன்ற டிபார்ட்மெண்ட் ஸ்ரோர்ஸ் தரும் கிரிடிட் கார்டுகளுக்கு வட்டி கூடுதலாக இருக்கும். ஒரே நிறுவனத்தில் கார்டைப் பொறுத்து, வட்டியும், மற்ற சேவைக்கட்டணங்களும் கூட மாறும். அதனால் ஆரம்பத்திலேயே உங்கள் வருமானத்துக்கு ஏற்றபடி ஒன்று அல்லது இரண்டு கார்டுகளை மட்டும் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

கடனைத் தவறாகப் பயன்படுத்தினால் சொல்லொணா துயரங்களைச் சந்திக்க நேரிடும். அவற்றைப் பற்றி வேறு ஒரு சமயம் பார்ப்போம். கடனை உபயோகிப் பதில் ஆபத்து நிலைமை வந்துள்ளது என்பதை அறிவிக்கும் சில குறிப்புகளை மட்டும் இப்போது பார்ப்போம்.

- கையிலோ, வங்கியிலோ பணமில்லாத போது கிரிடிட் கார்டுகளை உபயோகித்தல்
- கிரிடிட் கார்டுகளுக்கான முழுப் பணத்தையும் மாதாமாதம் கட்ட இயலாமை
- ஒரு கடனைக் கொடுக்க மற்றொரு கடனை நிறுத்துதல்
- ஒரு கார்டில் ரொக்கத்தை எடுத்து மற்றொரு கார்டுக்கான தவணைப் பணத்தைக் கட்டுதல்
- அதிகப்படியான கிரிடிட் கார்டுகளுக்கு விண்ணப்பித்தல்
- கிரிடிட் கார்டின் கடன் தொகையை அதிகரிக்கச் சொல்லி விண்ணப்பித்தல்
- கிரிடிட் கார்டுகளைத் திருப்பிக் கொடுக்காமல் கடன்களை ஒருங்கி ணைக்கக் கோருதல்



இன்னும் அதிக விபரங்களை அடுத்த இதழில் பார்ப்போம். இதற்கிடையில் உங்களுக்குள் எழும் கேள்விகளுக்கு விடை காண பெரி. முத்துராமனுடன் 416-430-0623 தொடர்பு கொள்ளுங்கள் மின்அஞ்சல்: perrii@successbizsolaiton.com

• • • •


HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336



விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059, FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca



நாளையை இன்றே தொடுவோம்



- கடந்த சில வருடங்களில் இன்ஸ்ரன்ஸ் பிரிமியம் குறைந்து வந்துள்ளது, உங்களுக்குத் தெரியுமா?
- உங்களுக்கு ஏற்ற காப்பீடு, சரியான பிரிமியத்தில் உள்ளதா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?
- குழப்பம் தரும், காப்பீடு பற்றிய விவரங்களை இலகு தமிழில் புரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியவர்.

பெரி. முத்துராமன் 416.430.0623.
A licensed broker, working for you.

இவர் எல்லாக் கம்பெனிகளின் பிரிமிய விவரத்தையும் கூறி, உங்களுக்கு ஏற்ற இன்ஸ்ரன்ஸையும் எடுக்க உதவுவார். பிறகென்ன! இழப்பதற்கு ஒன்றுமில்லை, எல்லாம் லாபம்தான்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள் 416. 430.0623
A. Licensed borker working for you.

**பெரி. முத்துராமன்**, MBA, M.COM., PFPC
*Insurance Broker*
Award Insurance Brokers inc.
Tel. 416-430-0623 Cell. 416-278-2026

# 11ஆவது (அரங்கு) ஆடல்

11 ஆவது நிகழ்வு (மனவெளி) கடந்த யூலை மாதம் 18ஆம் நாள் Markham Theater இல் நடைபெற்றது. சுமார் மாலை 6:10 க்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வு 300 நிமிடங்களின் பின்னர் 11:10 அளவில் நிறைவுக்கு வந்தது. நிகழ்வைப் பற்றி பார்ப்பதற்கு முன்னர்

1. நாடகத்தின் தனித்துவம் யாது?
ஏனைய கலைகளை விட இது இயங்குகின்ற நிலையில் எப்பொழுதுமுள்ள கலையாகும். இது ஒரு சக்தி மிகு இயங்கு கலை.

மனிதருடன் மனிதர் நேரடியாக உறவாடும் கலை நாடகக்கலை. கலைஞரின் எதிர்வினைகளை நடிகர் கண்டு கொண்டே சிருஷ்டிக்கின்றார். பார்போரின் எதிர்வினை களை உணர்கின்றனர். அவர்களின் அமைதியும் எதிர்வினைதான். ஆரவாரமும் எதிர்வினைதான். செலவில்லாத ஒரு கலை நாடகக்கலை, நாடகக்கலைக்கு அத்தியாவ சியமாகத் தேவைப்படுபவை வெளியும், உடலும் தான்.

**ரதன்**

2. நாடகத்தில் பங்கு கொள்ள ஏன் விரும்புகின்றோம்?
நாடகத்தில் பங்கு கொள்வோரை அதனால் பெறும் மனோ உணர்வினைக் கொண்டு நான்காகப் பிரிக்கலாம்.
1. மிகச் சாதாரணமானவர்கள்
2. சாதாரணமானவர்கள்
3. உயர்ந்தவர்கள்
4. அதி உயர்ந்தவர்கள்

### மிகச் சாதாரணமானவர்கள்

கலைஞரை புகழும் பொழுது அவரது அகம் திருப்தியடைகிறது. இச் சுய திருப்தியினை மாத்திரம் அடைபவர்கள் மிகச் சாதாரண-மானவர்கள்.

### சாதாரணமானவர்கள்

நாடகத்தில் பங்குபெறும் பொழுது ஒரு புதுஉற்சாகமும், மகிழ்ச்சியும் நிரம்பி வழியும். உடல், உளத் தடைகள் நீங்கி ஒரு தளர்நிலை தோன்றும். இது பெரும் மன மகிழ்வை உளத்திருப்தியை ஏற்படுத்தும். இவர்கள் சாதாரணமானவர்கள்.

### உயர்நிலையினர்

கூட்டுக்கலையான நாடகத்தில் நடிக்கும் பொழுது பாத்திரங்களின் குணாதியங்களை ஆராய்ந்து அப்பாத்திரமாக மாறுவதன்மூலம், சமூகத்தை புரிந்து கொள்ளும் பக்குவம் வாய்க்கிறது. இப்பக்குவம் பெறுவோர் உயர்நிலையினர்.

### அதிஉயர்நிலையினர்

இப்பக்குவநிலையைப் பெற்றோர், தம்மை அறியும் நிலைக்குச் செல்வர். சமூகத்தில் தனது இருப்பு, தான் யார்? என்று உள்முகமாகத் தேடத் தொடங்குவர். உள்முகத் தேடல்களையும் ஆன்மீக உளத்திருப்திகளையும் பெறுவோர் அதிஉயர்நிலையினர்.

இவ்விரு பகுதிகளும் பேராசிரியர் சி. மௌனகுருவின் "அரங்கியல்" என்ற நூலில் இருந்து பெறப்பட்டவை.
(இந்நூலை காலம் செல்வம் 905-475-3887 பெற்றுக்கொள்ளலாம்)

## நிகழ்வின் நிகழ்வுகள்

1. மூலதனம் - தோப்பில் பாஸியின் மூலப்பிரதி ஏனோதானோ எனச் சுருக்கப்பட்டுள்ளது. மூலப் பிரதியில் உள்ள பல முக்கிய பகுதிகள் தவிர்க்கப்பட்டு காதலுக்கும் கற்புக்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளன. சுமார் 55 ஆண்டுகளுக்கு முற்பட்ட இப்பிரதி இன்றைய இளம் போராளிகளை கொச்சைப்படுத்துவதாகவே உள்ளது. இது தோப்பில் பாஸியின் பிழை அல்ல. அது அன்றைய கால கட்டம். இன்று அப்படி அல்ல. அதுவும் போராளி கற்புக்கு அழுத்தம் கொடுத்துப் பேசுவது அபத்தம், அபத்தம். ஒரு வானொலி நாடகம் மேடையேறியுள்ளது. ஆரணியா பாபு, தனா பாபு, சகாப்தன் ஆகியோரின் நடிப்பு சிறப்பாகவுள்ளது.

2. தத்துப்பிள்ளை - கமல்ஹாசன், கே.எஸ். பாலச்சந்திரனின் ஒலி இசைநாடாவை எவ்வாறு செய்தாரோ, அதன் மறுபதிப்பை K.S.B. எங்களுக்கு (பார்வையாளர்களுக்கு) செய்துள்ளார். ஆனாலும் முதலாவது நாடகம் தந்த நித்திரையை கலைக்க இந்நாடகம் பெரும் உதவி செய்தது. எங்களுக்கு எப்பொழுது K.S.B. சீரிய நாடகத்தைத் தரவுள்ளார்?

3. சமாந்தரங்கள் - வித்தியாசமான முயற்சி. ஆங்காங்கே, தடைகள் தோன்றினாலும், பாராட்டுக்கள். தாய் மகளுக்கிடையிலான பாசம், முரண்பாடுகள் நடனமாக மாறியுள்ளன.

4. காலயந்திரங்கள் - இந்திரா பார்த்தசாரதியின் நாடகம். நேரத்தின் முக்கியத்துவம், அதன் பின்னணியில் எழும் இயந்திர வாழ்வியல் என விரிந்து செல்லும் இந்நாடகம் இந்நிகழ்வின் ஒரேயொரு நாட-கமாகும். தகப்பனாக நடித்தவர், மகளாக நடித்தவர் மிகவும் சிறப்பாக மனதைத் தொட்டனர். தாயாக நடித்தவர் இன்னமும் சற்று ஆழமாக பாத்திரத்தை உள்வாங்கியிருக்கலாம். அலுவலக காட்சிகளை இன்னமும் சுருக்கியிருந்தால் இறுக்கமாக மாறியிருக்கும். பேராசிரியரின் குரல் ஓர் அறிவிப்பாளரின் குரலாகவே ஒலித்தது. இந்தக் குறைபாட்டை இயக்குனர் கவனத்தில் எடுக்கவில்லை. முதல் பாராட்டுக்கள் இந்திரா பார்த்தசாரதியை நினைவில் நிறுத்தியமைக்கு அடுத்த பாராட்டுக்கள் துஷி ஞானப்பிரகாசத்துக்கு.

5. Act Without Words = Stage without Acting - சாமுவெல் பெக்கட்டின் இந்த அபத்த நாடகம், மனித வாழ்வை சித்தரிக்கிறது. சத்யா தில்லைநாதனின் முயற்சிக்கு பாராட்டுக்கள். சிறப்பான நெறியாளரின் கைகளில் சிக்கியிருந்தால் சத்யா இன்னமும் சிறப்பாக செய்திருப்பார். நாடகம் பற்றிய குறிப்பிருந்தும் நாடகத்தை விளங்கிக்கொள்ள பலரால் முடியாமல் இருந்தது.

6. துளிரும் சருகுகள் - இரு வயோதிபர்கள் தமது அவலங்களை, துயரங்களை பகிர்ந்து கொள்கின்றனர். முதலில் நாடக மேடையில் வைக்கப்படும் பொருட்களுக்கும், இசைக்கும் ஒலி,



ஒளிக்கும் காரண காரியம் இருத்தல் வேண்டும். ஞானம் லம்பேட் "விடை தேடும் வடிவங்கள்" என்ற நாடகத்தில் ஒரு சிறு மெல்லிய நீல நிற ஒளி இழை மூலம் பல அர்த்தங்களை தெரிவித்தார். இங்கு பின்னணியில் காட்டப்பட்ட "ஒளி வெள்ளம்" என்னவோ கூறியது(?) இயக்குனருக்கே வெளிச்சம்.

அடுத்ததாக ஒரு சமூகப்பிரச்சினை கூறப்படும் பொழுது அதற்கு சரியான ஆய்வு முன் வைக்கப்பட வேண்டும். உதாரணம் கடந்த சில இதழ்களில் (விளம்பரம்) ராது என்பவர் எழுதும் சமூகக் கட்டுரை பல தளங்களில் ஆய்வு செய்கிறது.

ஆனால் இந்த நாடகம் எந்தவித சமூக பொறுப்பின்மையும் இன்றி பெண்களை கொச்சைப்படுத்துகிறது. முதியர்களின் பிரச்சினைக்கு ஆண் சாயம் பூச முற்படுகிறது. வயோதிபர்களில் ஆண்கள், பெண்கள் என இருவருக்கும் பிரச்சினையுள்ளது. பாத்திரங் கள் அமைக்கப்படும் பொழுது ஓரளவுக்காவது சமூக நியாயங்கள், பொதுத்தன்மைகளுடன் பொருந்தி அமைக்கப்படவேண்டும். ஒரு மூன்றாந்தர சினிமாவுக்கு ஈடாக, மிகவும் மோசமாக படைக்கப்பட்டுள்ளது. எந்தவித நாடக பிரக்ஞையுமற்ற நெறியாள்கை.

அண்மையில் கனடா வந்திருந்த வெங்கட்சாமிநாதன் "தெரு நாடகங்கள்" அதன் அவசியம் பற்றி வலியுறுத்தியிருந்தார். மௌனகுரு கூறியது போல வெளியும், உடலும்தான் நாடகத்துக்கு அவசியம். "தெரு நாடகங்கள்" இதனை பிரதிபலிக்கின்றன. கனடாவில் ஏன் 'மனவெளியின் பழைய நாடகங்கள் பல இவற்றை பிரதிபலித்தன. 100 நிமிடங்களில் "கருஞ்சுழி" உணர்த்தியது இதையே. 300 நிமிடங்களில் இந்நிகழ்வு எதனை உணர்த்துகிறது.

பேராசிரியர் மௌனகுரு கேட்டது போல் "நாடகத்தில் ஏன் பங்கு கொள்ள விரும்கின்றோம்?" இந்நிகழ்வு, இந்நிகழ்வை நடத்தியோரை "மிகச் சாதாரணமானவர் களாகவே" உணர்த்தி நிற்கிறது. அகம் புகழ்ச்சியை பெறும் பொழுது திருப்தியடைகிறது. "அதி உயர்நிலை" யில் இருந்து ஏன் மிகச் சாதாரணநிலைக்கு விடை தேட முற்பட்டால்(?) அடுத்த நிகழ்வு சிறப்பாக அமையும். இல்லையேல் வானொலி நாடகம், தொலைகாட்சித் தொடர் என தரிசிக்க வேண்டி வரும்.

**பிற்குறிப்பு: மக்கள் எதை விரும்புகின்றார்கள் என்பதை நாங்கள் தீர்மானிப்பதைவிட நாங்கள் மக்களுக்கு என்ன விடயத்தைக் கூறவிரும்புகின் றோம் என்பதே அவசியம். எஸ். வி. சேகரின் நாடக மன்றங்கள் போல் எதையும் கூறி எப்படியும் மேடையேற்றி னால் அது நாடக ரசிப்புத்தன்மையை அழித்து விடும்.**


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்



Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# சீரிய முயற்சிகளும் ஈழத்தமிழர்களும்

ஈழத்தமிழ் இலக்கியம் பற்றி தமிழகத்தமிழர்கள் அக்கறை கொள்வதில்லை, அங்கீகரிப்பதில்லை, பொருட்படுத்துவது மில்லை என்ற குறை எப்போதும் ஈழத்தமிழரிகளிடம் உண்டு. ஒரு சில விதிவி லக்குகள் உண்டுதான். கலாநிதிகள் கைலாசபதி, சிவத்தம்பி போன்றோர் கல்வித்துறையில் ஒரு காலும் முற்போக்கு எழுத்தில் ஒரு காலும் பதித்த காரணத்தாலும் இவ்விரு நிறுவனங்களின் அறிமுகமே போதுமானதாலும், உடன் அங்கீகாரம் பெற்றனர். மற்றபடி படித்தறிந்து, தேர்ந்து யாரையும் அங்கீகரிக்கும் வழக்கம் தமிழகத்தில் கிடையாது. தமிழகத்தில் உள்ள சிறப்பான பங்களிப்பு தந்துள்ளவர்களுக்கே தமிழகத்தில் அங்கீகாரம் இல்லாத போது ஈழத்துத்தமிழ் எழுத்துலகம் தங்களைக் கண்டுகொள்ளவில்லையே என்ற ஆதங்கம் ஏதும் நியாயமோ, அர்த்தமோ கொண்டதாகத் தெரியவில்லை. இதை நான் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சொல்லி வந்திருக்கிறேன்.

## வெங்கட் சாமிநாதன்

ஆனால் ஈழத்தமிழர் எங்கிருந்தாலும் தமிழக இலக்கிய பிரவாஹத்தை தொடர்ந்தே வந்திருக்கிறார்கள். அது அவர்களது இயல்பு என்பதும், தமிழகத்தில் எழும் சீரிய முயற்சிகளுக்கு தமிழகத்தார்களைவிட ஈழத் தமிழர்களே அதிக ஆர்வம் காட்டி, ஆதரவும் தந்துள்ளார்கள் என்பது எனக்கு எழுத்து பத்திரிகை காலத்திலிருந்து தெரிந்த விசயம். அது வரலாறு. இப்போது இன்னொரு சான்றைப் பற்றிச் சொல்லப்போகிறேன்.

இலங்கையில் கொழும்புவிலிருந்து இவ்வருடம் தொடங்கப்பட்டிருக்கும் பேராசிரியர் செல்வநாயகம் அறக்கட்டளை தன் முதல் விருதுக்கு, ஐராவதம் மகாதேவனின் "ஆரம்ப கால கல்வெட்டுக்கள்: தொடக்கத்திலிருந்து ஆறாம் நூற்றாண்டு வரை" (Early Tamil Epigraphy: From the earliest Times to the 6th century A.D) என்னும் கல்வெட்டு ஆராய்ச்சி நூலுக்கு அவரது ஆயுட்கால சாதனையாக, 2003-ம் ஆண்டின் மிகச்சிறந்த ஆராய்ச்சி நூலை அறக்கட்டளையின் நிர்வாகக்குழு ஏகமனதாகத் தேர்ந்து எடுத்துள்ளது. முதல் விருதே எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி தமிழ் மொழியின் தமிழ் வரலாற்றின் ஆரம்ப காலம் பற்றிய புதிய பார்வைகளை உருவாக்கித்தந்துள்ள, ஒரு மைல்கல் என கருதப்படத்தக்க ஓர் ஆராய்ச்சி நூலுக்கு தரப்பட்டுள்ளது, இவ் ஈழத்து அறக்கட்டளை-யின், நிர்வாகிகளின், உயர்ந்த லட்சியங்களும், அதற்கேற்ற செயல்பாடுகளும், அச்சமூகத்தின் கௌரவத்தை உயர்த்தியுள்ளன. இவ் வாராய்ச்சி நூல் ஐராவதம் மகாதேவனின் தன் நீண்ட கால உழைப்பின், தேடல் தாகத்தின் விளைவு. குறிப்பாக, அவர் இந்திய நிர்வாகத் துறையிலிருந்து ஓய்வு பெற்றபின் கடந்த 14 வருடகால கடுமையான உழைப்பில் பெற்றது. அறக்கட்டளையின் முதல் அடிவைப்பே அதற்குச் சிறப்புதரும் ஒன்றாக அமைந்ததற்கு சிவத்தம்பியின் தலைமையில் இயங்கும் நிர்வாகக்குழுவைப் பாராட்டவேண்டும்.

**பேராசிரியர் செல்வநாயகம் அறக்கட்டளையின் முதல் விருது வழங்கப்படும் விழா யூலை 29ஆம் நாள் நடை பெற்றது.**

தமிழ் நாடு அரசோ, பண்டித உலகமோ, இலக்கிய உலகமோ, இந்த கௌரவத்தையும், அங்கீகாரத்தையும் அவருக்குத் தரவில்லை. இந்த நூலை வெளியிட்டுள்ள நிறுவனங்கள், தமிழ் நாட்டில் ஒரு தனி மனித ஆர்வமும் (எஸ். ராமகிருஸ்ணன், கிரியா, சென்னை) Harvard University, Cambridge, Massachusett-ம் தான். இதைப்புரிந்துகொள்ள ஒரு பழம் செய்தியை நினைவு படுத்திக்கொள்ளலாம். 1960களில் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடந்தது, தமிழ் அறிஞர்களின் நிகழ்வாக இல்லாது, ஓர் அரச-யியல் மாநாட்டு ஆரவாரத்தோடும் திருவிழா கோலாகலத்தோடும் நடத்தப்பட்டது. ஐராவதம் மகாதேவன் அளித்த ஆராய்ச்சிக் கட்டுரை, தமிழர் பழம் பெருமைக்கு அகலனாக இல்லாது போன காரணத்தால், கடும் கண்டனங்களுக்கு உள்ளாகி, மகாதேவன் அவமானப்படுத்தப்பட்டார். இதற்குத் தலைமை தாங்கியவர், திராவிட அரசியல் சார்பு கொண்டவரும் தமிழ் பண்டிதருமான இலக்குவனார் என்பவர். பொதுவாகவே தமிழ் பண்டித உலகமே திராவிட அரசியல் வகுக்கும் அறிவார்ந்த நிலைப்பாட்டை கேள்வியின்றி மேற்கொண்ட உலகம் தான். அதை கோபமாகவே முன் வைக்கும் உலகம் தான். அதனால் இலக்குவனாரை மாத்திரம் இதற்கு இலக்காக்குவது தவறு.

ஐராவதம், இந்திய அரசின் நிர்வாகத்துறை அதிகாரி. அரசியல் சார்புகள் அவர் துறைக்கு அப்பாற்பட்டன. ஆனால் தமிழ் ஆராய்ச்சிக்குத் தடையில்லை. அதிலும் சிவராமமூர்த்தி போன்ற கலைத்துறை, வரலாற்று அறிஞர் ஆதரவில் செயல்படுபவர்க்கு அமைதியாக தன் தேடலில் அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, ஐராவதம் மகாதேவனால் முழுநேரமும் ஓர் ஆர்வலர் குழுவையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு தீவிரமாக தன் ஆராய்வில் ஈடுபட முடிந்துள்ளது.

அவரது ஆராய்ச்சி, இதுகாறும் அதிகம் கவனம் பெறாத ஆரம்ப கால கல்வெட்டுக் களை மாத்திரமே களனாக கொண்டது. மிக நீண்ட கால நாகரிகமும், சரித்திரமும், இலக்கிய பதிவுகளும் கொண்ட நாடுகளில் தமிழ் நாடும் நாகரிகமும் ஒன்று. தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஊரும், கல்லும் ஒரு நீண்ட வரலாற்றைக்கூறும். அவ்வரலாறு அதன் கட்டிடங்களிலும், கல்வெட்டுக்களிலும், இலக் கியங்களிலும் பதிவாகியுள்ளது. இலக்கி யத்துக்கு முந்திய பதிவுகள் கல்வெட்டுக் களில். கல்வெட்டுக்கள் இவ்வளவு பரவலாக வும், அதிக எண்ணிக்கையிலும் தென்னிந்தியா வில் பரவியிருப்பதுபோல் வேறு எங்கும் காணக்கிடைக்காது. அதிலும் தமிழ் நாட்டில் காணப்படுபவை கி.மு. மூன்றாம் நுற்றாண்டி லிருந்து தொடங்கும் வரலாறு கொண்டவை.



**தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஊரும், கல்லும் ஒரு நீண்ட வரலாற்றைக் கூறும். அவ் வரலாறு அதன் கட்டிடங்களிலும், கல்வெட்டுக் களிலும், இலக்கியங்களிலும் பதிவாகி யுள்ளது. இலக்கியத்துக்கு முந்திய பதிவுகள் கல்வெட்டுக்களில். கல்வெட்டுக்கள் இவ் வளவு பரவலாகவும், அதிக எண்ணிக்கை யிலும் தென்னிந்தியாவில் பரவியிருப்பதுபோல் வேறு எங்கும் காணக்கிடைக்காது.**

ஐராவதம் மகாதேவன் தன் தீவிர ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டுள்ள கி.மு. 3-ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நுற்றாண்டு வரையான கால கட்டத்தில் மௌரிய சாம்ராஜ்யத்தின் காலத்தில் தெற்கு நோக்கி பயணத்தை தொடங்கிய ஜைனர்கள், பௌத்தர்கள் கொண்டு வந்து தமிழ் நாட்டுக்கு அறிமுகம் செய்த பிராஹ்மி எழுத்துக்கள் கொண்ட கல்வெட்டுக்கள். இன்றைய தமிழ் எழுத்துக்களின் வரி வடிவத்தின் ஆரம்பங்கள் நாம் தெரிந்துள்ள கோவில் கல்வெட்டுக்களோ, செப்புத் தகடுகளோ அல்ல. இவை பிந்திய வடிவங்கள். சாசனங்கள். ஜைனர்கள் வாழ்ந்த மலைக்குகைகளில் சாசனங்களாக பொறிக்கப் பட்டவை தாம் ப்ராஹ்மி கல்வெட்டுக்கள். வெகு குறைவான எழுத்துக்களே கொண்டவை. சிதைந்த நிலையில் உள்ளவை. எளிதில் சென்றடைய முடியாத இடங்களில் படித்துப் படி எடுக்கமுடியாத லையில் உள்ளவை.

இவற்றை முதலில் 1924 வாக்கில் கண்டறிந்து, இவை ப்ராஹ்மி வடிவில் உள்ளவை என்று சொன்னவர் கே. சுப்பிரமய அய்யர். ஆனால் இவை தென்னிந்தியாவில் மற்ற இடங்களில் காணும் ப்ராஹ்மியிலிருந்து மாறுபட்டு, சில புதிய அம்சங்களைக் கொண்டதாகக் கண்டு, அந்த மாற்றங்கள், தமிழ் மொழி உச்சரிப்புக்கேற்ப செய்யப்பட்ட மாற்றங்கள் எனவும் கண்டறிந்தார். ஆனால் இந்த இழையைப்பற்றி மேற்கொண்ட ஆராய்வை அவரோ, பின் யாருமோ தொடரவில்லை. அப்பயணமே மறக்கப்பட்டுவிட்டது.

இப்போது மகாதேவன் அந்த 120 கல்வெட்டுக்களும் இருக்கும் இடங்களுக்குச் சென்று, 66 புகைப்படமாக, கைஎழுத்தாக, இன்னும் பல நவீன சாதனங்ளில் படி எடுத்து பிரசுரித்துள்ளார். அவற்றை வாசிக்கும் முறை, அக்காலத்தில் வழங்கிவந்த 18 மெய் யெழுத்துக்களும் 8 உயிர் எழுத்துக்களுமே கொண்ட மொழியின் ஓரளவு கட்டமைக்கப்பட்ட நெடுங்கணக்கு, போன்றவற்றையெல்லாம், தொல்காப்பியம், மற்றும் பல் கண்டுகளின் உதவியோடு கொடுக்கப்பட்டுள்ள விரிவான விளக்கங்கள், இக்கல்வெட்டுக்கள் ஒவ்வொன்றினதுமான கால நிர்ணயம், கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பட்டுள்ள மனிதர்கள், கிராமங்கள், ஊர்களின் பெயர்கள், சொல்லாக்க வரலாற்று விளக்கம், சொற்களின் இலக்கணக்கூறுகள், இப்படியாக எல்லாவற்றின் விளக்கத்தொகுப்பு என எல்லாம் அடங்கிய களஞ்சியம் இது. மேற்கொண்டு ஆராய்வைத் தொடங்குகிறவர் கள் ஐராவதம் சென்றவிடங்களுக்கெல்லாம் போய் கல்வெட்டுக்களை மீண்டும் தேட வேண்டாது, ஒரு நீண்ட கால கட்டம் வரை, அவரே உடன் அழைத்துச் செல்வது மட்டுமல்லாமல் தான் கடந்து வந்த பாதையின் வரைபடத்தையும் தந்துள்ளார்.

போன வருடம் ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் இந்நூல் வெளியிட சென்னையில் உள்ள பாரதீய வித்யா பவனில் ஒரு சின்ன அரங்கில் கழ்ச்சிக்கு எற்பாடு செய்திருந்திருந்தார்கள். அவ்வரங்கு சுமார் 100 பேருக்கு மட்டுமே அமரும் வசதி கொண்டது. இலக்கிய கூட்டங்களுக்கே 100 பேர் கூடுவது துர்பலமாக இருக்கும்போது, கல்வெட்டு ஆராய்வு பற்றிய ஆங்கில நூலின் வெளியீட்டுக்கு எத்தனை பேர் வருவார்கள் என்று கடந்த அனுபவம் அவர்களுக்குச் சொன்னது. ஆனால் அன்று வந்த கூட்டத்தின் பெருக்கத்தைப்பார்த்து, உடனே கீழ்த்தளத்தில் இருந்த பெரிய அரங்கிற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட 1000 பேருக்கு மேல் இருக்கை தரும் பெரிய அரங்கு அது. அன்று நிற்போர் பெருக்கத்தையும் சேர்த்து அரங்கு நிறைந்து வழிந்தது. இது தமிழ் நாட்டின் அதிசயங்களில் ஒன்று.

இந்நூல் தமிழ் இலக்கியம், தமிழ் நாடு, அக்கால சமூகம், தமிழ் மொழியின் வளர்ச்சி, அது வளர்ந்த வரலாறு போன்ற பல சுவாரஸ்யம் நிறைந்த நாம் புதிதாகக் கேட்கும் செய்திகளைத் தருகிறது. இச் செய்திகள் தமிழ் நாடு மட்டுமின்றி, இலங்கை உள்ளிட்ட தென்னிந்திய பரப்பு முழுதையும் உள்ளடக்கிய பின்னணியில் தமிழ் மொழியின் ஆரம்பங்களையும் சொல்கிறது.



**அதுபற்றி அடுத்த இதழில்**

# சர்வதேச தமிழ் குறும்திரைப்பட விழா

மனிதர்களில் ஒவ்வொருவரது தனிப்பட்ட கலை இரசனைகளுக்கும் ஏற்ப அவர்களை பல வகையினராக பிரிக்கலாம். அவர்களில் பெரும்பான்மையினர் கிடைக்கின்ற நேரத்தை எப்படியாவது போக்கி விடலாம் என்ற வகையினர். மேடைகளில் கலைவிழாக்கள் என்ற பெயரிலும் வெள்ளி திரைகளிலும், தொலைக்காட்சிகளிலும் சினிமா, சீரியல் நாடகங்கள் என்ற பெயரில் நடக்கும் கூத்துக்களின் தரம்பற்றியும் அதற்காக அவர்கள் செய்யும் செலவுகள் பற்றி எல்லாம் அக்கறை கொள்ளமாட்டார்கள். இப்படியாக களுக்குள் தலையை தொங்கவிட்டு கொண்டு பசியை மறந்து இரசிக்கும் நாடகங்களில் அப்படி என்ன தான் இருக்கின்றது. பார்த்து விடலாமே என்று சில மணித்துளியினை ஒதுக்கினால் ஒரு கணப்பொழுதில் தலையிடி தொடங்கிவிடும். சொல்லப்படும் கதைகளில் யதார்த்தமே இருக்காது. சினிமா என்ற பெயரில் கூத்துக் காட்டப்புறப்பட்டு அந்த துறையில் நின்று பிடிக்க முடியாமல் பிடரியில் கால்பட ஓடிவந்து தமது சினிமாக் கனவுகளை தொலைக்காட்சி சீரியல்கள் என்ற பெயர்களில் வாழ்ந்து கொண்டு, மக்களின்



## சாதாரண மனிதன் சிந்தனையிலிருந்து

பெரும்பான்மையினரின் அக்கறையற்ற இரசிப்பு தரத்தினை பலர் தமக்கு சாதகமாக்கி கலை என்ற பெயரில் கலைகளை கொலை செய்து அதை பணமாக்கி சட்டைப்பைகளில் போட்டுக் கொள்ளுகின்றார்கள். மக்களின் இரசிப்பு தன்மையை பணமாக்க, தரத்தை பற்றியோ அல்லது தமது கலைப் படைப்புக்களை பார்ப்பவர்களில் அறிவுபூர்வ மாக சிந்திப்பவர்களும் கலை அறிவும், ஆற்றலும் உள்ளவர்களும் இருப்பார்கள். அவர்கள் தமது படைப்புக்களை மட்ட ரகமாக மதிப்பு போட்டுவிடக்கூடாது என்றெல்லாம் கவலைப்படமாட்டார்கள். படைப்பாளிகள்

**பெரும்பான்மையினரின் அக்கறையற்ற இரசிப்பு தரத்தினை பலர் தமக்கு சாதக-மாக்கி கலை என்ற பெயரில் கலைகளை கொலை செய்து அதை பணமாக்கி சட்டைப் பைகளில் போட்டுக் கொள்ளுகின்றார்கள்.**

என்ற பெயரில் பணம் பண்ணுவது மட்டுமே கனவாகக் கொண்டு இருக்கும் பல பெருச்சாளிகள் அதிகரித்து விட்டதால் படைப்புக்களின் தரமும், மக்களின் இரசனை களும் குழிதோண்டி புதைக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. படைப்புக்களின் தரம் உயரவேண்டுமானால் மக்களின் இரசனை யின் தரம் உயரவேண்டும். மக்களின் இரசனையை அதிகரிக்க செய்தால் மட்டுமே கலையை கொலை செய்பவர்களின் செயலை நிறுத்தலாம். அதற்கு என்ன செய்யலாம்?

பெரும்பான்மை மக்களின் நேரத்தையும் பணத்தையும் சூறையாடிக் கொண்டு, இரசனையை சிந்தனையை வளரவிடாமல் பார்த்துக்கொண்டு இருப்பவர்கள், சினிமா மற்றும் தொலைக்காட்சி சீரியல் நாடகம் என்ற பெயர்களில் குப்பையைக் கொட்டு கிறார்கள். அப்படிப்பட்ட படைப்புகளையே வீடுகளில் இருந்து சமைப்பதற்கு கூட நேரமில்லாமல் தொலைக்காட்சிப்பெட்டி நேரத்தையும் பணத்தையும் பாழாக்குபவர் களின் கைவண்ணங்களையே அதில் காணக்கூடியதாக இருக்கின்றன. அதற்குள் வளர்ந்து விட்ட விஞ்ஞானத்தின் உதவியி னால் கிடைத்துள்ள Computer Animation போன்ற உத்திகளும் படும் திண்டாட்டம் சொல்லி முடியாது.

தமிழ் மக்களின் ரசனையை கலை ஆர்வத்தையும் ஆற்றலையும் வளர்க்கும் நோக்குடன் Independent Art Film Society எனும் அமைப்பு பல தமிழ் குறும்திரைப் படங்களை பல நாடுகளிலும் இருந்து தரு வித்து ஒரு குறும்திரைப்படவிழாவினை ஒழுங்கு செய்துள்ளது. Toronto வில் சென்ற வருடங்களில் நடைபெற்ற முதல் இரண்டு விழாக்களை தொடர்ந்து மூன்றாவது சர்வதேச தமிழ் குறும்திரைப்பட விழா வருகின்ற ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை, Scarborough Town Centre ற்கு அண்மையில் அமைந்துள்ள Civic Centre அரங்கில் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளது. தமிழ் குறும்திரைப்படங்களுடன், விசேட காட்சிகளாக தமிழ்மக்களின் இரசனையையும் குறுந்திரைப்படம் பற்றிய அறிவை விருத்தி செய்யும் நோக்கோடு சில வேற்றுமொழிக் குறுந்திரைப்படங்களும் திரையிடப்பட உள்ளன.

### குறுந்திரைப்படம் என்றால் என்ன?

Short film என்பதன் நேரடி மொழி பெயர்ப்பே குறும்படம் என்பதாகும். குறும்படம் எனும் போது, படம் என்றால் புகைபடத்தையும் குறிப்பிடுவதனால் மக்களுக்கு குறும்படம் என்றால் குறுகிய புகைப்படம் எனக் குழப்பம் உண்டாகிவிடும் என்றும் எண்ணி விடக்கூடாது என்பதற்காகவே 'குறும்திரைப்படம்' என்று அழைக்கப்படுகின்றது. திரைப்படங்களில் முழுநீள திரைப்படங்கள் (Feature Film) 60 நிமிடத்திற்கு மேற்பட்டதாகவும் குறும்திரைப் படங்கள் (Short Film) 60 நிமிடத்திற்குட்பட்ட தாகவும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. கதைகளில் சிறுகதைகள், நாவல்கள் என்று இருப்பதை போலவே திரைப்படங்களில் நீளப்படம், குறும்படம் என பிரிக்கப்பட்டுள்ளது. முழுநீளப்படங்கள் 60 நிமிடத்திற்கு மேலாகவும் பலமணி நேரத் திற்கு கூடப் போகக்கூடிய படங்களாகவும் இருக்கும். ஆனால் குறும்படங்களில் 15 வினாடியில் வரக்கூடிய விளம்பரப் படங்கள் முதல் மூன்று நிமிடம் வரை செல்லக்கூடிய Music Video வாகவும் இருக்கலாம்.

திரைப்பட விழாக்களில் திரையிடப்படும் குறுந்திரைப்படங்களின் நேரம் தகுதி போன்றவற்றை அத்திரைப்பட விழாக்களை ஒழுங்கு செய்யும் அமைப்புகளின் கட்டுப் பாட்டுக்குள்ளேயே இருப்பதனால் திரைப்பட விழாக்களுக்கு விழாக்கள் சட்டங்கள் வேறுபடுகின்றன. சென்ற தடவைகளில் நடை-பெற்ற சர்வதேச தமிழ் குறும்திரைப்பட விழாக்களில் 60 வினாடியில் கூட கதைகள் சொல்லப்பட்டது பலருக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. அதிலும் தமிழில் கூட இப்படித் தயாரிப்புக்கள் இருக்கின்றனவா என்ற ஆச்சரியத்தை பலருக்கும் நாம் கூட ஏன் இவ்வளவு இலகுவாக சொல்லக்கூடாது என்ற ஆர்வத்தை சிலருக்கும் கொடுத்தது. அவர் களில் ஒரு சிலரது தயாரிப்புக்களும் எதிர்வரும் விழாவில் அரங்கேற உள்ளது.

நீங்களும் ஏன் அந்த அனுபவங்களை August 14 சனிக்கிழமை பெறக்கூடாது? சிந்தியுங்கள் சிந்தனை தொடரும்

பரம் ஜி

ஒரு சாதாரண மனிதன்

# பழைய வாகனங்களை வாங்கும் போது



தற்போதைய நேரத்தில் வாகனங்களின் காப்புறுதி தலைக்கு மேல் உள்ளதால் கூடுதலானவர்கள் பழைய அல்லது சில வருடங்கள் பாவித்த வாகனங்களை வாங்குவதைக் கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. ஏனெனில் புதிய வாகனங்களின் காப்புறுதியானது சில வருடங்கள் பாவித்த வாகனங்களின் காப்புறுதியைவிட குறைந்ததாகக் காணப்படுவதேயாகும். அப்படி பாவித்த வாகனங்களை வாங்கும் போது பலபேர் விலையைத்தான் முக்கியமாக கொள்வது உண்டு. அதைவிடுத்து அதன் சரித்திரத்தையும் விபத்தில் சிக்கியதா, எத்தனை ஓட்டுநர்கள் இந்த வாகனத்திற்கு உரிமையாளராக இருந்துள்ளனர், பராமரிப்பு எப்படி இருந்துள்ளது, வாடகை வாகனமாக பாவிக்கப்பட்டு உள்ளதா என்பது போன்ற பல முக்கிய விடயங்களை நீங்கள் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் ஒரு பழைய வாகனத்திற்கும் இன்னொரு அதே மாதிரியான வாகனத்திற்கும் இடையில் விலையில் ஆயிரக்கணக்கில் வித்தியாசம் உள்ளதை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். தமிழர்களால் ஏமாற்றப்பட்டு விடுவோம் என்று சீனர்களையும், இந்தியர்களையும் நம்பி நம்மவர்கள் இறுதியில் கட்டாயம் ஏமாற்றப்படுவதை கண்கூடாகப் பார்க்க முடிவதால் இக்கட்டுரையை தந்தேன்.

மறுபடியும் சந்திக்கும் வரை சோதீஸ்




வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்
Param Gnana
Sales Representative
HomeLife GTA
Realty Inc.
www. themathuram.com
Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)
HomeLife
Higher Standards
themathuram.com

# உதைபந்தாட்டம் COPA - 2004

## விளையாட்டு செய்திகள்

உலககிண்ணம், ஐரோப்பிய கிண்ணம் போன்றவற்றைப் போலவே அமெரிக்க COPA கிண்ணமும் மிகவும் பிரசித்தி பெற்றது. உலகில் முதல் நிலை வகிக்கும் பிரேசில் மீண்டும் கிண்ணத்தை வென்று தனது பலத்தை நீரூபித்துள்ளது.




### *7வது முறையாக பட்டம் வென்றது பிரேசில்*

*கோபா அமெரிக்கக் கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் 4-2 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனாவை வென்று 7வது முறையாகக் கோப்பையை வென்றது பிரேசில். ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியின் ஆட்ட நேர இறுதியில் இரு அணி களும் தலா 2 கோல்கள் போட்டு சமநிலை யில் இருந்தன. அதையடுத்து வழங்கப்பட்ட பெனால்டி சூட்-அவுட்டில் பிரேசில் இரு வாய்ப்புக்களையும் கோலாக்கியது. மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் கோலடித்து சமநிலையை உருவாக்கினார் பிரேசிலின் அதிரியானோ. இவர் இப்போட்டியில் மொத்தம் 7 கோல் களை அடித்து அதிக கோலடித்த வீரராகத் திகழ்கிறார்.*

*பிரேசில் தரப்பில் அதிரியானோ, ஏடு, டியாஜோ, ஜூவான் ஆகியோர் கோலடித்தனர். ஆர்ஜென்டீனா தரப்பில் கிறிஸ்டியான் கோன்சலெஸ், ஜூவான் பாப்லோ கோலடித்தனர்.*

*ஆட்டத்தின் முதல் கோலை ஆர்ஜென்டீனா அடித்தது. முதல் பாதியின் இறுதியில் கோலடித்து சமநிலையை உருவாக்கியது பிரேசில். பின்னர் ஆட்டத்தின் 87வது நிமிடத்தில் கோலடித்து முன்னிலையை பெற்றது ஆர் ஜென்டீனா. போட்டி முடிய சில நிமிடங்களே இருந்ததால், தாங்கள் வெற்றிபெற்றதாக ஆர்ஜென்டீனா வீரர்கள் ஆர்ப்பரித்தனர். பிரேசில் வீரர்கள் அமர்ந்திருக்கும் இடத்துக்கு எதிரே சென்று கொக்கரித்தனர்.*

*அதையடுத்து இருதரப்பு வீரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. போலீஸார் தலையிட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனால் யாரும் எதிர் பாராத நிலையில் ஆட்டம் முடியும் தறுவாயில் அதிரியானோ கோல் அடித்து சமநிலையை உருவாக்கினார். அதையடுத்து தொடர்ந்து பெனால்டி சூட்அவுட் வழங்கப்பட்டது. ஆர்ஜென்டீனாவின் ஆந்தரீஸ் டிஅலெ ஸாண்டிரோ அடித்த பந்தை பிரேசில் பந்துக் காப்பாளர் ஜூலியோ செசார் தடுத்தார். அதே நேரத்தில் கேப்ரியல் ஹெயின்ஸ் பந்தை கோல் கம்பத்துக்கு வெளியே அடித்தார்.*

*பிரேசில் வீரர்கள் தங்களுடைய இரு வாய்ப்புக்களையும் கோலாக்கினார். கடந்த 4 கோபா அமெரிக்க கால்பந்து போட்டியில் இது பிரேசிலுக்கு கிடைத்த 3வது பட்டமாகும். மொத்தத்தில் 7வது முறையாக பட்டத்தை அதுவென்றுள்ளது. அதே நேரத்தில் கடந்த 11ஆண்டுகளில் ஆர்ஜென்டீனா ஒருமுறைகூட இப்பட்டத்தை வென்றதில்லை. முக்கியவீரர் களான ரொனால்டோ, ரொனால்டினோ, காகா, ரோபர்டோ கார்லோஸ் இல்லாம லேயே களமிறங்கியது பிரேசில் என்பது குறிப்பிடத்தக்கது.*

*"இந்த வீரர்கள் மிகவும் திறமையானவர்கள். சர்வதேச புகழ் பெற்றவர்கள். ஆனால் தேசிய அணிக்காக விளையாடியதில்லை என்ற ஒரு குறைமட்டும் இவர்களுக்கு உண்டு" என்று பிரேசில் பயிற்சியாளர் பெரீரா பெருமையுடன் கூறினார்.*

## எஸ். கணேஷ்

*உலகம் முழுவதும் உள்ள வீரர், வீராங்கனைகள் தங்களது ஒட்டுமொத்த திறமையை பரிசோதித்துக்கொள்ளும் முக்கியமான போட்டியாக ஒலிப்பிக் உள்ளது. 4 ஆண்டு களுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டி யில் பதக்கம் வெல்பவர்கள் 'ராஜா', 'ராணி' மாதிரியான புகழைப் பெற்றுவிடுவார்கள். ஆத லால் அந்த 'போரில்' யார், யார் மன்னராகவோ, அரசியாகவோ (விளை யாட்டுக்குத்தான்) முடிசூடப் போகிறார்கள் என்பதை உலக நாடுகள் மிகவும் கவனத்து டன் பார்த்துவரும். பல்வேறு சிறப்புக்களைப் பெற்ற ஒலிம்பிக் போட்டி, இம்முறை ஏதென்ஸில், கிரீஸ் நாட்டில் ஆகஸ்ட் 12ஆம் திகதி முதல் நடைபெறுகிறது.*

*இவை ஒருபுறமிருக்க, இதுவரையிலான நவீன ஒலிம்பிக் போட்டிகளில் நிகழ்ந்துள்ள பல் வேறு சுவாரஸ்யங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் முக்கியமானவை இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. 1956ஆம் ஆண்டிலிருந்து 1964ஆம் ஆண்டுவரையிலான போட்டிகளின் முக்கியதுளிகள் இதோ!*
*மெல்போன் (1956): முதல் முறையாக அவுஸ்திரேலியாவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. குதிரையேற்றப் போட்டிகள் மட்டும் ஸ்ரொக்ஹோமில் நடைபெற்றன. இதில் அப்போதைய சோவியத் யூனியன் ஆதி க்கம் செலுத்தியது. உக்ரைனைச் சேர்ந்த மாலுமி விளாதிமீர் குட்ஸ் 5ஆயிரம் மீட்டர் மற்றும் 10ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் அட்டகாசமான வெற்றியைப் பெற்றார்.*

*சோவியத் யூனியன் 37 தங்கப் பதக்கங்களுடன் மொத்தம் 98பதக்கங்களை வென்றது. அமெரிக்கா 74 பதக்கங்களை வென்றது. நீச்சலில் சோவியத்யூனியனுக்கும் ஹங்கேரிக்கும் பலத்த போட்டி நிலவியது. வோட்டர் போலோவில் சோவியத்யூனியன் வீரர்களும் ஹங்கேரி வீரர்களும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டனர். அடியில் உதைத்துக்கொண்டனர். எனினும் ஹஞ்கேரி வென்றது. அவுஸ்திரேலியா 8 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலம் வென்றது. 18 வயது பெண் இரு பதக்கங்களை வென்றார்.*
*ரோம் (1960): அமெரிக்க ஓட்டப்பந்தய வீராங்களை வில்மாருடால்புக்கு 3 தங்கங்கள் கிடைத்தன. அவுஸ்திரேலியாவின் ஹெர்ப் எலியட் 1500மீட்டர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்தார்.*

*மரதன் போட்டியில், எதியோப்பியாவின் அபிபி பிகிலா வெறுங்காலால் ஓடி தங்கம் வென் றார். டெக்காத்லான் போட்டியில் அமெரிக்கா வின் ரேபர்ஜோன்சன் மிகக் குறுகிய வித்தியாசத்தில் வென்றார். அவரும் இரண்டா மிடம் பிடித்த சுவான் குவாங்கும் (தைவான்) ஒரே பல்கலைகழகத்தில் பயின்றவர்கள். அமெரிக்காவின் காசியஸ் கிளே லைட்வெயிட் பொக்ஸிங் பிரிவில் பட்டம் வென்றார். இவர்தான் பின்னாளில் முகமது அலியாக புகழ் பெற்றார். இதிலும் சோவியத் யூனி யனே அதிக பதக்கங்களை வென்றது. மொத் தம் 103 பதக்கங்களைக் குவித்தது. அதற்கு அடுத்தபடியாக அமெரிக்கா 71 பதக்கங் களைக் குவித்து இரண்டாமிடம் பிடித்தது. ரோக்கியோ (1964): ஆசியாவில் முதல்முறையாக ஒலிம்பிக் போட் டியை நடத்திய நாடு ஜப்பான். இப்போட்டிக்கா 3பில்லியன் டொலர்களை அந்நாடு செலவழித்தது. முந்தைய நாடுகள் செலவழித் ததை விட இது 6மடங்கு அதிகம்.*

*போட்டி வெற்றிகரமாக நடத்தப் பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட இந்த நகரம் புதுப்பிக்கப்பட்டது. ஹிரோஷிமாவில் அணுகுண்டு போடப்பட்டதற்கு ஒரு மணிநேரத்துக்குப் பின்பு பிறந்த, 19வயதான யோஷினோரி சகாய் ஒலிம்பிக் சுடரை ஸ்டேடியத்துக்கு ஏந்தி வந்தார்.*



*அவுஸ்திரேலிய நீச்சல் வீராங்கனை டான் பிரேசர் 100 மீட்டர் ப்ரீஸ்டைல் பிரிவில் மூன்றாவது முறையாக தங்கம் வென்றார். நான்கு தங்கங்களை வென்ற முதல் வீரராக அமெரிக்காவின் டான் ஸ்கோலண்டர் உருவெடுத்தார். சோவியத்யூனியனின் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை லாரிசா லடிநினா இருதங்கம், இருவெள்ளி, இரு வெண்கலப்பதக்கங்களை வென்றார்.*

*100 மீட்டர் ஓட்டத்தை 10விநாடிகளில் ஓடி புதிய உலகசாதனை படைத்தார் அமெரிக்காவின் பாப் ஹேய்ஸ். 800மீட்டர், 1000 மீட்டர் பந்தயங்களில் நியூஸிலாந்தின் பீட்டர் ஸ்நெல் முதலிடம் வென்றார். 10,000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் அமெரிக்காவின் பில்லி மில்ஸ் வென்றார். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவரும் உலக சாதனை படைத்தவருமான ரான் கிளார்க் தோல்வியடைந்தார்.*

*ஊக்கமருந்தில் 'சீனியர்கள்' சிக்கினாலும் யு.எஸ். சுக்கு பலம் சேர்க்கும் 'ஜூனியர்கள்' ஊக்கமருந்து, திறமை குறைதல் ஆகியவற்றுடன் சீனியர்கள் போராடிக் கொண்டிருக்கு, அமெரிக்காவின் ஒலிம்பிக் பதக்க வாய்ப்புகளுக்கு எந்தவித பாதிப்பும் இருக்காது என அந்நாட்டு தடகள அதிகாரிகள் கருதுகிறார்கள். காரணம்.. புதுமுகங்களின் படையெடுப்பு! ஒலிம்பிக் போட்டிக்கான அமெரிக்க தடகளக் குழுவின் பயிற்சி சாக்ரமென்டோவில் நடைபெற்று வருகிறது. அவர்களில் ஜூனியர்கள் புதிய சகாப்தத்தை உருவாக்கும் நிலையில் உலா வருகின்றனர்.*

*"1994ஆம் ஆண்டில் நான் வந்ததற்குப் பின், ஓரிரண்டு வீரர்கள்தான் உருவானார்கள். புதிய அலை ஏதும் அடிக்கவில்லை. தற்போது இளம்வீரர்கள் முன்னேறி வருகின்றனர். இது புதுமுகங்கள் உருவாகும் காலம்" என்கிறார் 1999ஆம் ஆண்டு 200மீட்டர் ஓட்டத்தில் முதலிடம் பெற்ற இன்ஜெர் மில்லர்.*

*ஜஸ்டின் காட்லின், ஷான் கிராஃபோர்டு, லதாஷா கோலண்டர் என பல புதிய நட்சத்திரங்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். சிட்னி ஒலிம்பிக்கில் 5பதக்கங்களை வெனற் மரியோன் ஜோன்ஸ், ஊக்கமருந்து பயன்படுத்துபவர் என சந்தேகிக்கப்படுகிறார். அவரது திறனும் பழைய நிலையில் இல்லை. 100மீட்டர் ஓட்டத்தில் பங்கேற்கும் தகுதியை இழந்துள்ளார். 200மீட்டர் மற்றும் நீளம் தாண்டுதல் போட்டிகளில் இவரது நிலை இனிமேல்தான் தெரியும்.*

*மான்ட்கோமாரியும்...: 100மீட்டர் ஓட்டத்தில் சாதனைபுரிந்துள்ள டிம் மான்ட்கோமரி ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கியுள்ளார். அவர் உள்பட 4வீரர்களுக்கு வாழ்நாள் தடைவிதிக்கும் வாய்ப்பு உள்ளது. தடகள வீராங்கனை டோரி எட்வார்ட்சும் ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கியுள்ளார். 2003இல் 100மீட்டர் ஓட்டத்தில் இரண்டாமிடம் பிடித்த எட்வர்டசும் ஊக்கமருந்தில் பிடிபட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. "இவர்கள் இல்லையென்றாலும், அவர்களது இடத்தை நிரப்ப நிறைய வீரர்கள் இருக்கிறார்கள்" என்கிறார் மகளிர் பயிற்றுநர் சூ ஹம்பிரே. 100மீட்டர் ஒட்ட வீராங்கனை கோலண்டர் மிகச் சிறப்பாக ஓடுகிறார். கல்லூரி மாணவியான லாரென் வில்லியம்சும் (20) திறமைமிக்கவர். 100மீட்டர் ஓட்ட வீரர் கிரீன் பதக்கத்தை தக்கவைத்துக்கொள்வார் என்ற எதிர்பார்ப்பு இருந்தாலும் காட்லின் (22) கிராஃபோர்டு (26) ஆகியோர் கடும் போட்டியைத் தருவர். போல்-வால்டில் புதுமுகமான டோபி ஸ்டீவென்சன் திறமைமிக்கவராக உருவாகியுள்ளார். 19வயது சான்யா ரிச்சர்ட்ஸ் 400மீட்டர் ஓட்டத்தில் மிகச் சிறந்து விளங்குகிறார்.*



*ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் நிச்சயம் மற்ற நாட்டு வீரர்களுக்கு அமெரிக்க ஜூனியர்கள் சவாலாக இருப்பர் என்றால் மிகையாகாது.*

# "Places to Grow : Better Choices Brighter Future"




ஒன்ராரியோவின் அமைச்சர் டேவிட் கப்ளான் (David Caplan) July 12,2004 ஆந் திகதி வெளிப்படுத்திருக்கும் "Sprawl" என அழைக்கப்படும் புதிய நகர்த்திட்டம்.

எதிர்வரும் 30 வருடங்களிற்கான புதிய நகரங்களை உருவாக்குதுடன் ஏற்கனவே இருக்கும் சில நகரங்களை நவீனப்படுத்தும் முறை ஒன்ராறியோவிற்கு ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தினால் நயாகரா போல்ஸ் (Niagara Falls) இலிருந்து Peterborough வரையும் வடக்கே Collingwood வரையான பகுதியை Greater Golden Horshoe என அழைக்கப்பட்டு இந்தப் பகுதியை மேலதிக அபிவிருத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

July 12,2004 அமைச்சர் டேவிட் கப்ளானால் கொண்டு வரப்பட்ட இந்த திட்டம் 2031 ஆம் ஆண்டுவரை மேலதிகமாக 4 மில்லியன் வரையான மக்கள் இந்தப்பகுதியில் குடியேறுவார்கள் எனவும், தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப்புதிய நகர்திட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள 26 நகரங்களும் தனித்தனியாக இயங்கக்கூடிய வசதிகளைக் கொண்டதாகவும், இந்த நகரினைச்சுற்றியுள்ள மக்கள் இந்தப்பகுதியில் தொழில்புரிந்து கொண்டு வாழக் கூடியதாகவும் இருக்கும் என்றும் கூறப்பட்டது. மக்கள் ஒரு இடத்தில் இருந்து கொண்டு மிகத்தூரத்திற்கு தொழில் புரிவதற்காக செல்வதால் நேரம் செலவழிக்கப்படுவதுடன், பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு எதிராகவும் காணப்படு கின்றது. இவற்றை நோக்கமாகக் கொண்டே இந்த எதிர் காலத்திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம், ஏற்கனவே உள்ள சில நகரங்களும் மேலதிக வசதிகளினால் மேம்படுத்தப்படும். சில புதிய நகரங்கள் உருவாக்கப்படலாம் எனவும் எதிர்பாக்கப்படுகின்றது. இந்தத் திட்டம் ஆரம்ப நிலையிலேயே இருப்பதால் எதிர்காலத்தில் பல தகவல்களை எதிர் பார்க்கலாம்.

## வீடு சம்பந்தப்பட்ட தகவல்கள்

- ஒன்ராரியோவில் 73000 குடும்பங்கள் அரசு உதவியுடன் பெறும் வீடுகள், அப்பாட்மென்களிற்காக காத்திருக்கிறார்கள்.
- 100,000 மக்கள் தங்கள் வருமானத்தின் 50% இற்கு மேலான தொகையை வாடகைக்காக செலுத்துகிறார்கள். மிகுதி 50% ஆன வருமானமே மற்றைய தேவைகளிற்கு பாவிக்கப் படுகின்றது.
- 1991-2003 வின் GTA இல் அதிகரித்த மக்கள் தொகை 1.15 மில்லியன் ஆகும். இந்தக் காலத்தில் உருவாக்கப்பட்ட புதிய இருப்பிடங்கள் 411,267.
- GTA இல் சராசரியாக ஒரு வீட்டில் வாழ்பவர்கள் 2.7 மக்கள் ஆகும். 2001 இற்கு முன்பாக இந்த தொகை 2.8 ஆகக்காணப்பட்டது.
- GTA இல் சராசரியாக குடும்பங்கள் இடம்மாற எடுக்கும் கால இடைவெளி 10.9 வருடங்கள் ஆகும். 2001 ஆண்டிற்கு முன்பாக இந்தக்காலம் 7.9 வருடங்களாகக் இருந்தது.

கடந்த இதழில் திருத்தம் - ரொறொன்ரோவில் உள்ள தெருக்களின் நீளம் - 5.36km

### 4000 புதியவீடுகள்

*20 கெக்ரர் (Hectares) நிலத்தில் 4000 புதிய வீடுகள் கட்டுவதற்கு கனடியன் ரயர் (Canadian Tire) தீர்மானித்துள்ளது. செப்பேட் & லெஸ்லி (Sheppard & Leslie) பகுதியில் அமைந்துள்ள இந்தப் பெரிய நிலத்தில் தனிவீடுகள், சேர்ந்தவீடுகள் கொண்டோ அப்பாட்மென்ட் கட்டிடங்கள் வியாபாரத் தளங் கள் என புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. இந்த புதிய வீட்டுத்திட்டம் ஆரம்ப கட்டத்தி லேயே உள்ளது. புதிதாக Sheppard Subway line உருவாகிய பின்பாக அனேகமான வீட்டை உருவாக்கும் நிறுவனங்கள் இந்தப் பகுதியில் தமது கூடிய கவனத்தைச் செலுத்துவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.*

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்



## Interest Rate

| | |
|---|---|
| 5 Yrs Mortgage | 5.40% |
| 3 Yrs Mortgage | 4.70% |
| Prime Rate | 3.75% |
| Bank Rate | 2.00% |




# ஜப்பானியர்களும் தலைவணங்கலும்

பல நூறு ஆண்டுகளாகவே ஜப்பானில் தலைவணங்கும் வழக்கம் இருந்து வருகிறது. வரவேற்பு, வழியனுப்பல், மரியாதையைக் காட்டல், மன்னிப்புக் கோருதல், தன்னடக் கத்தைக் காட்டல், புரிதலை உணர்த்தல், அனுமதியைத் தெரிவித்தல், இப்படி ஒரே தலையை தாழ்த்துவதன் மூலம் எல்லாவித மான உணர்ச்சிகளையும் வெளிக்காட்டுவது ஜப்பானியர்களின் பழக்கம். எப்பொழுது இந்தப் பழக்கம் தொடங்கியது என்று அறுதி யிட முடியாது என்பது மிகவும் தெளிவான உண்மை. ஏனென்றால், இது மிருகங்களிடமும் காணப்படுகிறது. பல குரங்குகள் பலம் வாய்ந்த குழுத்தலைவனைக் கண்டதும் தலை தாழ்த்துகின்றன என்பது மெய்ப்பிக்கப்பட்டிருக் கிறது.



## வெங்கட்ரமணன்

எப்பொழுது, எப்படி, ஏன், எதற்காக இந்த வழக்கம் தோன்றியது என்ற சர்ச்சைக் கெல்லாம் அப்பாற்பட்டது. ஒவ்வொரு ஜப்பானியரும் இந்தக் கலையைக் கற்றுத் தேறவேண்டியதன் அவசியம், ஒவ்வொரு நடவடிக்கைச் சூத்திரங்களைப் போலவும்

ஜப்பானில் தலைவணங்குதல் ஒரு கலையாக நீட்டிக்கப்பட்டிருக்கிறது. கலை என்று பொது வில் சொன்னாலும், ஷோகன் காலங்களில் இது ஓர் உயிர்காக்கும் வித்தையாக வும் இருந்திருக்கிறது. சரியான சமயத்தில் சரியான படி தாழாத தலைகள் சாமுராய்களின்வாள் களுக்கு இரையாகியிருக்கின்றன. தன்னைவிட வலியான் முன் தன்னைத் தாழ்த்திக் கொள் வது ஒரு வகையில் மிருகத்தனமான பிழைத்தல் உத்தி. பல வாக்கியங்களில் காட்ட முடியாத பணிவை ஒரே தலையை ஒரு நொடிக்குத் தாழ்த்துவதன் மூலம் சந்தேகத் திற்கு இடமில்லாமல் தெளிவாக்க முடியும். அந்தக் காலங்களில் (கி.பி. 1200-1868) பிறந்த குழந்தைகளுக்கு நடக்கத் தெரியுமுன் தலைவணங்கக் கற்றுக் கொடுக்கப்பட்டதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன. அதாவது, குழந்தை தவழ்ந்து தலை நிமிரத் தொடங்கும் காலத்தில் பெரியவர்களின் முன்பும், தெய்வத்தின் முன்னும் குழந்தையின் தலை-யைப் பிடித்து அமுக்கி எடுத்து அதை ஒருவகையில் அனிச்சைச் செயலாகவே அந்தக் குழந்தைக்கு ஊட்டியிருக்கிறார்கள். "மினோரு ஹொரதோ, அதாமானோ ஹிக்குக்கி, இனாஹோ கனா" என்று ஜப்பானிய மொழிய-லில் ஒரு பழமொழி இருக்கிறது. அதன் பொருள் "எத்தனை முதிர்கிறதோ அந்த அளவிற்கு நெற்பயிரின் தலை தாழும்". தலை தாழத்து வது பணிவைக் காட்டுவது மாத்திரமல்ல, நேரமறிந்து தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் அறிவு முதிர்ச்சியாகவும் அறியப்படுகிறது. இப்படி பல "தலை"முறைகளாக தாழ்ந்து கொண்டே இருப்பதால் மரபணுக்களில் கூட ஒரு வளைவு இருக்கலாம் என்று என்னுடைய நண்பர் ஒருவர் (மரபு நுட்ப விஞ்ஞானி) செல்லமாகச் சொல்லுவார். எது எப்படியோ இன்னும் வரும் தலைமுறைகளும் அனிச்சை யாகவே தாழும் என்று ஓரளவிற்கு நம்பிக்கையுடன் சொல்லலாம்.

அது சரி, புதிதாக ஜப்பான் செல்பவர்கள் எவ்வளவு தூரம் தலை தாழ்த்த வேண்டும். பொதுவில் மூன்று நிலைகளில் தலை தாழ்த்த லாம். முதலாவது இடுப்பிற்கு மேலுள்ள பாகங்களை முற்றாக மடக்கி முன் குவிதல். இந்த நிலைக்கு சய்-கிய்ரெய் என்று பெயர். (கோணம் 90). இது ஷோகன்களின் முடிவிற்குப் பிறகு பெரிதும் குறைந்து போய்விட்டது. இன்றைக்கும் கோவில்களில் புத்தர்களின் சிலைக்கு முன்னர் இதுபோல் ட - ப்போல் வளைவதைக் காணமுடியும். அதாவது தனக்கு முன் உள்ளவருக்கு ஒப்பிடும்போது தனக்கு எந்தவிதத் தகுதியும் இல்லை என்ற நிலையில் (கடவுளுக்கு, ஷோகன்களுக்கு, ஸாமுராய்களுக்கு முன்னால் ) தலை இப்படித் தாழும். இந்த நிலையில் கைகள் முழங்காலில் ஊன்றப்படும். இந்த உடல்மொழியில் என்னுடைய கைகளுக்கு உன்னிடம் எதுவும் வேலையில்லை (கத்தியை உருவப் போவதில்லை) என்று அர்த்தமாகிறது.

இரண்டாவதாக (கோணம் 45), மரியாதை, மன்னிப்பு, போன்றவையை உணர்த்த தலை கிட்டத்தட்ட நாற்பத்தைந்து டிகிரி தாழ வேண்டும். மரியாதைக்குரிய ஒரு நபரை (உதாரணமாக, நிறுவனத்தின் மேலாளர், கல்லூரி ஆசிரியர்) போன்றவர்களைப்பார்க்கும் பொழுது இந்த நிலையில் வணங்க வேண்டும். துக்கத்தை உணர்த்தவும் இதேதான். இந்த நிலையில் கைகள் இருபுறமும் உடலை ஒட்டினாற்போல் தொங்கவிடப்பட வேண்டும். (கைகளில் ஏதாவது பொருள் இருந்தால் பாதகமில்லை).

மூன்றாவதான நிலையில்தான் ஜப்பானியர் களின் தலைகள் கணக்கு வழக்கில்லாமல் காலந்தோறும் தாழ்ந்து உயருகின்றன. இதற்குத் தேவையான கோணம் இருபது டிகிரி. சராசரி சக ஊழியருக்குக் காலை வணக்கம் தெரிவிக்க, அவருக்கு மாலையில் விடை சொல்லிக் கொள்ள என்று பொதுவான எல்லா நிகழ்வுகளுக்கும் இந்த வணக்கம் போதுமானது. இதற்கு ஜப்பானிய மொழியில் ஓ-ஜிகி என்று பெயர். இந்த ஓஜிகிதான் ஜப்பானை இயக்கிக் கொண்டிருக்கிறது.

இதில் கோணம் மாத்திரம் போதாது, தலைதாழும் கால அளவும் முக்கியம். மிகவும் ஆபத்தான கட்டங்களில் ஜப்பானியர்கள் எதிரில் இருப்பவர் பொறுமையிழந்து ஒரு வார்த்தை சொல்லும்வரை தலை தாழ்ந்து நிற்பதைக் கண்டிருக்கிறேன். தவறு செய்த ஆய்வக மாணவன் என்னுடைய ஆசிரியருக்கு முன்னால் அப்படி அங்கம் புழுவாக நெளிய அண்டத்தை முழுவதும் அவருடைய கால-டியில் சமர்ப்பிப்பதுபோல் நின்றிருந்ததைப் பார்த்திருக்கிறேன். பொதுவில் முதல்வகை சய்-கிய்ரெய் வணக்கம் நான்கு அல்லது ஐந்து நொடிகளுக்கு நீடிக்கும். இரண்டாம் வகை



மரியாதை சராசரியாக இரண்டு நிமிடம். மூன்றாவது, வழக்கமான

தொடர்ச்சி 22ம் பக்கம்


16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

### குறுக்கு எழுத்துப் போட்டி இல. 154

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | 3 |
| | ■ | 4 | ■ | | ■ | ■ | |
| | ■ | ■ | | 5 | ■ | 6 | |
| 7 | | 8 | 9 | | ■ | | ■ |
| | ■ | | ■ | ■ | 10 | ■ | |
| | ■ | | | 11 | ■ | ■ | |
| ■ | 12 | ■ | ■ | | ■ | | 13 |
| 14 | | | | | ■ | 15 | 16 |

இட - வல

1. மீன்பாடும் தேன் நாடு எனப்படும் இடம்
5. யானை(வல-இட)
6. தோய்த்தல் செய்
7. தகுதி
10. ஆய்த எழுத்து
11. மங்களம் (வல-இட)
13. தகுதி (வல-இட)
14. தவளை
16. உள்ளே போ (வல-இட)

மேல் - கீழ்

1. கோவிலின் சமையலறை
2. ஓலையில் பின்னும் ஒருகொள்கலன்
3. மகளிர் சேலை
4. ஒழுகு
6. நீக்கு
8. பொருளின் இயல்பு
9. கோடு(கீழ்-மேல்)
11. இன்பம்
12. இசை
15. பாய் (கீழ்-மேல்)
16. பார் (கீழ்-மேல்)

*யூலை மாதம் வந்த குறுக்கெழுத்துப்போட்டியின் இலக்கம் 153. தவறுக்கு வருந்துகிறோம்.*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சூ | த் | தி | ர | தா | ரி | ■ | சொ |
| ரி | ■ | ன் | ■ | ளா | வி | ■ | ற் |
| ய | ■ | ப | ற | ண் | ■ | தி | பொ |
| கா | ■ | ண் | ■ | மை | ■ | கு | ழி |
| ந் | ■ | ட | ■ | ■ | உ | த | வு |
| தி | ரு | ம் | பு | ■ | ரு | ■ | ■ |
| ■ | ■ | ■ | ■ | ■ | வ | ரி | சை |
| அ | ஞ் | ச | ல | க | ம் | ■ | ஓ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் August 28, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**153இல் வெற்றி பெற்றோர்**

1) M. Mathusha , Scarborough
2) A. Senthil, Mississauga

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# எதிர்காலத் தமிழ் தலைமுறை பெயரற்ற, மொழியற்ற, வேரற்ற சமூகமாகி விடுமா?

## இளைய தலைமுறைக்கு புதிய கலாசாரம்தான் பிடிக்கிறதா? ! !

அடுக்குப் பிரிவுகளும் உள்ளன. இவற்றைப் பொறுத்து பண்பாட்டு அம்சங்களும், பண்பாட்டின் உள்ளார்ந்த கூறுகளும் மாறுபடுகின்றன.

இராமன் கதைக்கும், நந்தன் கதைக்கும், காத்தவராயன் கூத்துக்கும் ஒவ்வொரு பிரதேசத்துக்கும், ஒவ்வொரு சாதிக்கும் ஏற்றபடி வேறு விளக்கங்களும், வியாக்கி யானங்களும், வேறுபாடுகளும் இருப்பதை நாங்கள் அறிவோம்.

மொழியின் பயன்பாடு கூட இப்படியான வேறுபாடுகளைக் காட்டுகின்றது. எனவே பண்பாட்டை ஒரு முகம் கொண்டதாக நாங்கள் பார்க்க முடியாது என்பதை நாங்கள் முதலில் தெரிந்து கொள்வது நல்லது.

### சேரன்

இந்த நாட்டில் வாழ்ந்து, வளர்ந்து வருகின்ற புதிய தலைமுறைக்கு பண்பாடு பற்றிய கேள்வி ஒரு பெருங் கேள்வியாக எழுவது இயல்புதான்.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் அவர் களுக்கு முன்னால் "உங்கள் பண்பாடு என்ன?," அல்லது "உங்கள் அடையாளம் என்ன?" என்ற கேள்வி ஒரு தவிர்க்க முடியாத கேள்வியாக அடிக்கடி மேலெழுகின்றது.

அந்தக் கேள்விக்கு மறுமொழியாக ருக்மணிதேவி அருண்டேல் செய்த அறுவைச் சிகிச்சை மூலம் பிறந்த பரதநாட்டியம் தான் தமிழ் பண்பாடு என்று பெரும்பாலும் ஊட்டப்பட்டு வருகின்றது. ஆனால் நல்ல காலம் கூழ் காய்ச்சுவதும், கூழ் குடிப்பதும் கணிசமான அளவுக்கு இங்கு பெருகி

வருவதையும் நான் சுட்டிக்காட்ட வேண்டும். அது ஒரு தனித்துவமான எமது பண்பாட்டுக் கூறு என்பதைப் பல பண்பாட்டு அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்.

எமது பண்பாட்டில் மட்டும் அன்றி எல்லாப் பண்பாடுகளிலும் திருமணம் ஒரு முக்கியமான பண்பாட்டுக் கூறாக இருந்து வருகின்றது. உண்மையில் திருமணம் என்பது அல்ல திருமணம் சார்ந்த சடங்குகளே, அல்லது திருமணம் சார்ந்த சடங்குகளின் கலாசார வடிவமைப்புத்தான் பண்பாடாகப் பார்க்கப்படு கின்றது. அதில் கூட எவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன என்பதை நான் சொல்லாமலே நீங்கள் அறிவீர்கள்.

திருமணப் பதிவு என்பது ஒரு சடங்காகவே இப்போ மாறி இருக்கின்றது. மாப்பிள்ளையின் ஆடை அணிகள் ஒரு காலத்தில் இருந்தது போல அன்றி இப்போது பஞ்சாபி, வட இந்திய முறைக்கு மாறிவிட்டது. திருமணம் முடிந்த பிற்பாடு வரவேற்பு உபசாரம் என்று நடக்கின்ற போது மாப்பிள்ளை ஆங்கிலப் பாணி உடைக்கு மாறிவிடுவார். ஆனால் மணப் பெண்ணின் உடை மட்டும் மாறுவதில்லை. தமிழ் பண்பாட்டில் திருமணத்தை முறைப்படி எப்படிச் செய்வது என்ற அதிகாரம் முன்பு வீடியோ படம் எடுப்பவர்களுக்குத்தான் இருந்தது. இப்பொழுது திருமண மண்டபங் களை வைத்திருந்து, 'package deal' ஆக எல்லாவற்றையும் பொறுப்பெடுத்து விடுகின் றவர்களுக்குத் தான் எமது தமிழ் பண்பாட்டுத் திருமணம் எப்படி நடக்கவேண்டும் என்று வரையறை செய்கின்ற, கற்பனை செய்கின்ற அதிகாரம் இருக்கின்றது. அவர்தான் இப்போது திருமணத்தைப் பொறுத்தவரையும், 'பூப்புனித நீராட்டு விழா' நடத்துவதிலும் எங்களுடைய "பண்பாட்டுக் காவலர்" ஆகிவிடுகின்றார்.

சமூகவியல் ரீதியிலான ஓர் அணுகு முறையில்

**ஈழத்தமிழ் சமூகத்திடம் இருக்கும் பகட்டும், போலித்தனமும், பெருகிவரும் வணிக மயமாக்கமும், தமிழ் மொழி, தமிழ் பண்பாட்டியல் குறித்த அக்கறை யின்மையும் எமது எதிர்காலத் தமிழ்த் தலைமுறையைப் பெயரற்ற, மொழியற்ற, வேரற்றவர்களாகவும், அடையாளச் சிக்கலுக்குள் (identity crisis) எப்போதும் உழல்பவர்களாகவும் மாற்றி விடும் என்ற அச்சம் என்னிடம் உள்ளது.**

திருமணம் என்பது சொத்துக்களும், ஆதனமும் குடும்பங்களை விட்டு வெளியேறாமல் ஒரே குடும்பங்களுக்குள்ளும், சொந்தங்களுக் குள்ளும் சுற்றிச் சுற்றி பேணிவைத்திருக்கின்ற ஒரு முறையாகத்தான் இருந்து வந்திருக் கின்றது. சொந்தத்திற்குள் மாறி மாறி திருமணம் செய்கின்ற இந்த மரபும், அகமணமுறையும், அதன் முக்கியத்துவமும்



இதில் இருந்துதான் வருகின்றது.

இன்னொரு முக்கியமான அம்சம் திருமணத்தையும் பாலுறவையும் நிபந்தனை அற்று ஒன்றாக இணைத்தமை ஆகும். பல பண்பாடுகளில் திருமணம் என்ற நிறுவனத்தை இது பாதித்து வந்திருக்கின்றது. அறம், ஒழுக்கம், என்பன பெண்ணின் உடல் சார்ந்தும் தீர்மானிக்கப்பட்டது. பண்பாட்டின் காவலர் களாக நாங்கள் பெண்களையே நியமித்து வந்திருக்கின்றோம். அறுபதுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பெரும் அளவில் மேலை நாடுகளில் திருமணத்துக்கும் பாலியல் உறவுக்குமான கட்டிறுக்கமான பிணைப்பை உடைத்து விட்டன.

கனடாவில் வாழ்ந்து வளர்ந்து வருகின்ற தலைமுறைக்கும் இத்தகைய உடைப்பு நிகழ்வது தவிர்க்க முடியாமல் தான் இருக்கின்றது. இதுதான் இன்றைய யதார்த்தமாகவும் உள்ளது.

மரபார்ந்த திருமணங்களில் பெண் ஒரு அடிமை- குடிமை- உடைமையாகவே பரி- மாறப்படுவது வரலாற்று வழக்கமாக இருந்திருக்கிறது. இத்தகைய திருமணங்களின் விளைவாக உருவாகும் குடும்பங்கள் பெண்களுக்கு அவர்களுடைய சுயநிர்ண யத்தையும் சுய சிந்தனையையும், ஆற்றல் வெளிப்பாட்டையும் கட்டுப்படுத்துகின்ற ஒன்றாக அமைந்திருக்கிறது. திருமணம் என்பது ஒருவரின் தனிப்பட்ட தெரிவுதான். எனினும் எந்த நிறுவனத்திலும் சமத்துவம் இல்லாதபோது அது சமூகத்தைப் பாதிக்கக் கூடிய பல சிக்கல்களை உருவாக்கும்.

இப்போது திருமணத்தின் வடிவங்கள், இயல்பு

என்பன பெருமளவுக்கு மாறிவிட்டன. குடும்ப அலகு என்பதும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தமாதிரி இப்போது இல்லை. பொருளாதார சுதந்திரம் பெற்றவர்களாகவும் சுய ஆளுமையும் சுயநிர்ணயமும் உள்ளவர் களாகவும் புதிய தலைமுறை இங்கு உருவாகி வருகிறது. எனவே இவர்கள் மரபின் கட்டிறுக்கமான, ஆண்களுக்கு முதன்மை

தருகிற அமைப்புகளை, கருத்தியலை, நிறுவனங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஆடை, அணிகலன் என்பது பண்பாட்டின் குறியீடாக விளங்க முடியும். எனினும் இந்தக் குறியீடுகளும் மாறிவருகின்றன. கலப்பு (hybridity) என்பது புலம் பெயர்ந்த தமிழர்களுக்குத் தவிர்க்க முடியாத ஒன்று. இந்தக் கலப்பு, ஆடை அணிகலனிலிருந்து, உணவு, இசை, மொழி வரை நிகழ்கின்றது. இந்தக் கலப்பினால் பண்பாடுகள் ஆழம் பெறுவதும் உண்டு கலங்கிப் போவதும் உண்டு. எது நடைபெறும் என்பது அந்தச் சமூகத்தின் அறிவு வளத்திலும், அது நெருக்கடிகளை எதிர்கொள்கின்ற முறையிலும், பண்பாடு, மொழி போன்றவற்றின் நல்ல விழுமியங்களைப் பேணுவதிலும் தங்கி யுள்ளது.

ஈழத்தமிழ்ச் சமூகத்திடம் இருக்கும் பகட்டும், போலித்தனமும், பெருகிவரும் வணிக மயமாக்கமும், தமிழ் மொழி, தமிழ் பண்பாட்டியல் குறித்த அக்கறையின்மையும் எமது எதிர்காலத் தமிழ்த் தலைமுறையைப் பெயரற்ற, மொழியற்ற, வேரற்றவர்களாகவும், அடையாளச் சிக்கலுக்குள் (identity crisis) எப்போதும் உழல்பவர்களாகவும் மாற்றி விடும் என்ற அச்சம் என்னிடம் உள்ளது.

எமது புதிய தலைமுறைக்கு எமது மொழி வளம், இலக்கிய வளம், வரலாற்று வளம் பற்றிய அறிவூட்டுவதும், தமிழ் மரபின் உலகப் பண்பாட்டுக்கான பங்களிப்புகள், சாதனைகள் பற்றிய பெருமித உணர்வை ஊட்டுவதன் மூலமும்தான் நாம் வெற்றிபெற முடியும்.



# சரிதான் இப்ப உங்கள் முன் கடவுள் வந்து நின்றால் என்ன சொல்வீர்கள்?

தந்தை பெரியார், பெரியார் என்று தமிழ்ச் சமூகத்தால் அழைக்கப்பட்டு வந்த ஈ.வெ.ராமசாமி அவர்கள் தன்னுடைய கடைசிக் காலம் வரையில் ஒரு கலகக் காரனாகவே வாழ்ந்து முடித்தவர். சமூகம் கடைப்பிடித்த ஒழுக்கம், புனிதம், பெண்ணடிமை மற்றும் தேசியம் போன்றவற்றினைத் தகர்த்தெறிவதற்கு தன்னால் இயன்றளவு செயற்பட்டார். இவற்றின் விடுதலையே மனிதவிடுதலை என்றார். கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம் என்பன ஒரு தாயின் பிள்ளைகள் என்றும் குழந்தைகளைப் பயமுறுத்த பெரியவர்கள் பூச்சாண்டி காட்டுவது போன்ற சூழ்ச்சியே இவை என்றார்.



தனது கருத்துக்களை மேடைப் பேச்சுக்கள் மூலம் பரந்துபட்ட மக்கள் முன்நிலையில் கொண்டு சென்ற பெரியார் தனக்கேயுரிய கிண்டல் மொழியில் சமூகத்தின் அனைத்து அதிகாரங்களையும் தகர்த்தெறிந்தார். பாடசாலைக் கல்வி அனுபவம் இல்லாது அனுபவ அறிவையே அடித்தளமாகக் கொண்டு இயங்கியதே பெரியாரின் வெற்றி என்பார் தொ. பரமசிவன்.

ஒருமுறை கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த பெரியார் தமிழ்க் கதைகளில் கற்புக்கு இலக்கணமாகக் கூறப்படும் காவிய நாயகியை ஒரு தேவடியாள் என்று சொல்லிப் பேசிக் கொண்டிருந்தாராம். கூட்டத்திலிருந்த ஒருவன் எழும்பி கோபத்தில் "உன் கொம்மாதான் தேவடியாள்" என்றானாம். உடனே பெரியார் அவனைக் கூப்பிட்டு "சரி தம்பி என் அம்மா தேவடியாள்தான் அப்பவாவது நீ இந்த காவிய நாயகி தேவடியாள் என்று ஒத்துக்கொள்வாயா?" என்று கேட்டாராம்.

இன்னொரு கூட்டத்தில் கடவுள் இல்லை, கடவுள் இல்லை என்று பல உதாரணங்களுடன் பேசிக் கொண்டிருந்த பெரியாரை நோக்கி ஒருவன் எழுந்து, "எல்லாம் சரிதான் இப்ப உங்கள் முன் கடவுள் வந்து நின்றால் என்ன சொல்வீர்கள்" என்று கேட்டானாம்.

பெரியார் மிகவும் நிதானத்துடன் "கடவுள் இருக்கிறார் என்று சொல்வேன்" என்றாராம். இதுதான் பெரியார்.

- பரா



NIRU
நிரு பிராண்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (RÔTIES)
JAFFNA
Hot Curry Powder
POUDRE DE CURRY JAFFNA (PIQUANT)
Free
Spoon Inside
Niru BRAND ®
'நிரு' தயாரிப்புக்கள்'
கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன
No.1
முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்
தரம்
No. 1
Manufacturers & Distributors of
Niru Brand® Products
NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com
Distributors in Europe
UK. Marketing Office: NIRU ( Europe) LTD.
Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP,
U.K. Tel.: 44 + 208 640 8228
Fax: 44 + 208 640 8312

Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்



- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

## "நீலம் சில்க்"

T.P: 416-778-7455
Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

# LARGE INDOOR PUBLIC CAR AUCTION

**EVERY WEDNESDAYS EVENING**
**STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM**

## 100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL
- G.M. • FORD
- CHRYSLER • HONDA
- NISSAN • TOYOTA
- V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES






BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM

FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM

CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
**www.cialeasing.com**

**1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.**

# SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL








**Fork Lift licence $75.00**

**Tricl licence $599.00**

## In Classes

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- **A-Z & D-Z up grade • One on One Training**
- **Job Placement Right Away!**
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake $175.00**

**Excellent Quality - Low Cost Training**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan
Tel: 416.525.7958 / 416.412.7618
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




## In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (10 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

17 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
905-793-9546 / 416-616-5979
250 Summerlea Road, Brampton, ON

# விடுமுறைகளில் சில மறக்கமுடியாத நாட்கள்!

'ஹலோ!'
'வணக்கம் சேர். எப்படி இருக்கிறியள்?'
'அப்படியேதான் இருக்கிறேன். மாற்றம் ஏதும் இல்லை. நீங்கள் எப்படி?'
'எனக்கு இந்த மாதத்திலிருந்து பதவி உயர்வு ஒன்று கிடைத்திருக்கு.'

'நல்ல செய்தி. பல கம்பனிகளில் வேலை நீக்கம் நடந்துவருகின்ற இந்தக் கால கட்டத்தில் உமக்குப் பதவியுயர்வு கிடைத் திருப்பதையிட்டு மகிழ்ச்சி. வாழ்த்துக்கள்!'

'நன்றி சேர். நான் இப்ப எடுத்தது எதற்கென்றால், ரொறன்ரோவிலை சிறுவர்கள் பார்த்து மகிழ்ந்து பயன்பெறக்கூடிய பத்து இடங்கள்பற்றிய விவரங்கள் வேண்டும். கொஞ்சம் உதவிபண்ணுங்கோ. மகள் ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதவேணும்.'

## அறுவை - 23

'எப்ப வேணும்?'
'இப்ப தந்தால் நல்லது.'
'தொலைபேசியிலை என்னென்று தம்பி கட்டுரை எழுதுறது?'

'கட்டுரை அவள் எழுதுவாள். நீங்கள் சிறந்த பத்து இடங்களைச் சொன்னால் அவள் இன்ரநெற்றிலை வேண்டிய தகவல்களைத் திரட்டிக் கட்டுரையை எழுதுவாள். தலைப்பு Toronto's top ten attractions for children என்று பள்ளிக்கூடத்தில் கொடுத்திருக்கினம். அவளுக்கு Top Ten ஐ எப்படித் தெரிவு செய்வது என்பதில்தான் பிரச்சனை.'

'எனக்கும் போதிய தகவல்கள் தெரியாமல் சொல்வது சரியல்ல என்று சொல்லத்தான் தோன்றுகிறது. இருந்தாலும் தெரிந்த அளவில் பிரபலியமான பத்து இடங்களைச்



சொல்கிறேன் எழுதும். ...'

1. CN Tower
2. Harbourfront
3. Toronto Islands
4. Ontario Place
5. Air Canada Centre
6. Metro Toronto Zoo
7. Ontario Science Centre
8. ROM: The Royal Ontario Museum
9. Paramount Canada's Wonderland
10. Riverdale Farm.

'நன்றி சேர்.'

'உங்களுக்கு எத்தனை பிள்ளையள்?'
'மூன்று.'

'இப்ப நான் சொன்ன இடங்களில் பிள்ளைகளை எத்தனை இடங்களுக்குக் கூட்டிக் கொண்டு போயிருக்கிறியள்?'
"CN Towerக்குக் கூட்டிக்கொண்டு போயிருக்கிறேன்.'

'கோடை விடுமுறையில் பிள்ளைகளின் பொழுதுபோக்கு என்ன?'

'மூத்தவள் பகுதிநேர வேலை ஏதேனும் எடுத்துப்போடுவாள். மற்றவை வீட்டிலைதான்.'

'பிள்ளைகளை வீட்டுக்குள்ளேயே அடைத்து வைக்காமல் முடிந்த அளவுக்கு வெளி இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போவது அவர்களுடைய ஆளுமை வளர்ச்சிக்கு நல்லது. சில இடங்கள் பொழுது போக்குக்கு நல்லவை. சில இடங்கள் அறிவு வளர்ச்சிக்கு உகந்தவை. ஒன்ராறியோ தொல்பொருட் சாலையும் விஞ்ஞான நிலையமும் பிள்ளைகள் பார்க்க வேண்டிய அறிவு வளர்ச்சிக்கேற்ற இடங்கள்.'

'ஒரு நாளைக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன்.'

'ஒரு நாள் போதாது. அந்த அளவுக்குப் பார்க்கவும் படிக்கவும் அவ்விடங்களில் அதிகம் இருக்கின்றன. செல்லவேண்டிய

***பிள்ளைகளை வீட்டுக்குள்ளேயே அடைத்து வைக்காமல் முடிந்த அளவுக்கு வெளி இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போவது அவர் களுடைய ஆளுமை வளர்ச்சிக்கு நல்லது.***

மற்றுமோர் இடம் உண்டு. உலத் தமிழர் இயக்கம் நல்லதொரு நூல்நிலையத்தை நடத்திவருகின்றது. அதற்கும் பிள்ளைகளை அடிக்கடி அனுப்புங்கோ. தமிழ் நூல்களைப் படிக்க வையுங்கோ. தமிழர் மரபையும் பண்பாட்டையும் எங்கள் பிள்ளைகள் அறிய வேண்டும். இனத்துவத்தைப் பேண அவை உதவும்.'

'நல்லது சேர். வைக்கிறேன். வணக்கம்.'

'வணக்கம்.'

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!



கவிஞர் வி. கந்தவனம்


# SRI PARADISE Catering & Take -out

416.269.4509 / 416.509.2454

292 Markham Road, Scarborough, ON

திங்கள் - செவ்வாய்
கொத்துரொட்டி
ஆடு or மாடு or கோழி
$2 99

புதன் - வியாழன்
புட்டு Combo- குழல் பிட்டு, மாசிச்சம்பல், நெத்தலி, உருளைக்கிழங்கு குழம்பு
$2 99

வெள்ளி ரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை
$4 50

வெள்ளி
inner Special
மசாலா தோசை, சாம்பாறு, சம்பல்
$2 99

Dinner Special
சிங்கப்பூர் நூடில்ஸ், தண்டூரி சிக்கன்
$3 99



பரடைசின் Special
புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad
$2 99

Daily speciall
மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு
$2 99

சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு
கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு or மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, மீன் பொரியல், கட்டைச்சம்பல், கட்லட், உருளைக்கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல்
$ 5 9 9

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

# குறிப்பிடத்தக்க இயக்குனர்

## Shyam Benegal



இக்கட்டுரையின் நோக்கம், தற்பொழுது இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும், இயங்கிக் கொண்டிருக்கும் இயக்குனர்களுள் குறிப்பிடத்தக்கவர் "சியாம் பெனகல்". அவரது பன்முகம் பற்றிய அறிமுகமும், அவரது படைப்புக்கள் பற்றிய அறி முகப்படுத்தலுமே.

இவர் 1934 December 14 ஹைரதராபாத்தில் பிறந்தார். இவரது தாய்மொழி "கொங்கனி". இதற்கு எழுத்து வடிவம் இல்லை. அல்லது அழிந்துவிட்டது. இவர் தனது 12 ஆவது வயதில் "Fun in the Holidays" என்ற படத்தை தயாரித்தார். இது ஒரு 16mm படமாகும். இவர் பின்னர் ஒரு விளம்பர நிறுவனத்தில் சேர்ந்து விளம்பரப் படங்கள் தயாரித்தார். Lux Soap, Hima peas,

**வானரன்**

Rexona, பற்பசைகள் என் சுமார் 1000க்கு மேற்பட்ட விளம்பரப்படங்கள் தயாரித்தார். "kolynos பற்பசைக்கு" பிரபல ரவிச்சந்தர் இசை அமைத்திருந்தார்.

பின்னர் இவர் சில விவரணப்படங்களை இயக்கியிருந்தார். சிறுவயது முதலே தீவிரமாக படங்களை பார்ப்பவர். ரஷ்ய, மற்றும் Bicycle Theives போன்ற படங்கள் இவரை வசீகரத்துக் கொண்டன. இவர் சிறிதுகாலம் BBC யிலும் Neyw York இலும் சிறுவர் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தார். இவர் இன்று இந்தியாவின் "புதிய அலை" சினிமாவின் முன்னோடியாவார். வங்காளம் தந்த திரை முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

சபனா ஆஷ்மி (SHABANA AZMI), ஸ்மிதா பட்டில் (Smita Patil), ஆனாந் நாத், ஓம்பூரி, நஷரூதீன் ஷா போன்ற நடிகர்கள் இவரது படங்கள் மூலமே வெளிச்சத்துக்கு வந்தனர். அவர்களது திறமைகளை சிறப்பாக வெளிக்கொணர்ந்தார். இந்தியாவின் இரு சிறந்த நடிகைகளெனில் சபனா ஆஷ்மியையும், ஸ்மிதா பட்டிலையும் தான் குறிப்பிடலாம்.

### சினிமா பற்றிய அவரது கருத்துக்கள் சில

1. சினிமா சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் சமூக மாற்றத்துக்கான ஒரு காரணியாக அமையும்.

2. திரைப்படங்களுக்கு சொந்தவாழ்க்கை உண்டு. அவை குழந்தைகளைப் போன்றவை. அவை பெரியவர்களாக வளர்ந்து விட்டால், அவற்றிற்கும் படைப்பாளிக்குமான தொடர்புகள் அற்றுப்போய்விடும். பின்னர் அவை பார்வையாளர்களுடன் தன்னை இணைத்துக் கொள்ளும். இது மிகவும் முக்கியமானது.

3. பல படைப்பாளிகளின் படைப்புக்கள் என்னை ஈர்த்துள்ளன. ஆனால் எனது படைப்புகள் எனது குரலாகவே ஒலிக்கின்றன.

பதேர் பாஞ்சாலி, அடூர் கோபாலகிருஷ்ணனின் படைப்புக்கள் குறிப்பாக "சுயம்வரம்" (1972). 1970களில் அடூரின் படைப்புக்கள் மிகவும் காத்திரமானவை. Mirch Masala (1986), Ketan Mehta, Mirza போன்ற படைப்புக்களும், போன்றோர்களும். Kundn Shah வின் Jaaney Bhi Do Yoaro மிகவும் யதார்த்தமான படமாகும். Basu Chatterjeeவின் Sara Akash (1969) மணிகௌலின் Uski Roti (1970). மிருணன் சென்னின் படைப்புக்கள் போன்றன என்னை மிகவும் கவர்ந்தன. சிறந்த சமூக, அரசியல் விமர்சகராக கருத்தப்பட்டார்.

## இவரது படைப்புக்கள்

## ANKUR (1974)



ஒரு நிலப் பிரபுவின் மகனுக்கும், ஏழை விவசாயின் மனைவிக்குமான தொடர்பு அவளது வயிற்றில் குழந்தை, பிரபுவின் மகனுக்குத் திருமணமாகி விடுகிறது. கிராமத்துக்கு திரும்பிவரும் விவசாயிக்கு, மனைவியின் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள் தெரியாது.

இதில் சபனா ஆஷ்மி, ஆனாந் நாக் நடித்திருந்தனர். இப்படத்தையொட்டி பின்னாளில் "சுத்திலக்க கத்தாவ" என்ற சிங்களப்படம் வந்திருந்தது. பிரபுவின் மகன் ஒரு வில்லனாக படைக்கப்படாமல் ஒரு சூழ்நிலைக் கைதியாகவே படைக்கப்பட்டுள்ளார். அதே போன்று இவரது பாத்திரங்கள் ஒவ்வொன்றும் பன்முகத் தன்மை கொண்டு அகத்தை ஆய்வு செய்யுமா?

## NISHANT (NIGHT'S END) 1975

கிராமத்துக்கு ஒரு பள்ளி வாத்தியார், தனது மனைவி, மகனுடன் வருகின்றார். நிலப்பிரபுவும், அவனது தம்பிகளும், பள்ளி வாத்தியார் மனைவியை கற்பழித்து விடுகின்றனர். அவள் அவர்களது வீட்டிலேயே வாழ்கிறாள். பள்ளி வாத்தியார் கிராமத்து பூசாரியின் உதவியுடன், கிராமத்தவரை சேர்த்து வீட்டினுள் செல்கின்றார். இதிலும் சபனா ஆஷ்மி, அம்ரிஷ் பூரி, நஷருதின் ஷா போன்றோர் நடித்திருந்தனர்.



## Manthan (1976)

அரசு அதிகாரிகள், கிராமத்திற்குள் புகுந்து அவர்களது சமூக, பொருளாதார காரணிகளை அழிக்க முற்படுவது பற்றிய விமர்சனமாகவும் காட்டப்படுகிறது.

மிருக வைத்தியரும், அரசு அதிகாரியும், குஜராத்தில் உள்ள ஒரு கிராமத்துக்கு செல்கின்றனர். மிருக வைத்தியர் கூட்டுறவு முறையை அறிமுகப்படுத்த முற்படுகிறார். ஆனால் பண்ணை முதலாளிக்கு இது பிரச்சினை. இவர் மிகவும் குறைந்த சம்பளமே விவசாயிகளுக்கு கொடுக்கிறார். இது பாதிக்கப்படும் தனது வருமானமும் போய்விடும். கிராமசேவகர் கூட்டுறவு முறை தனது பலத்தை அழித்துவிடும் என்ற பயம்.

இப்படம் அரசியல், கலாசார வலுக்கள் போன்றவற்றின் விமர்சனமாகப் பதிந்துள்ளது.

இம்மூன்று படங்களும் மிகவும் முக்கியமான சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளை விமர்சிக்கிறது. இவரளவுக்கு எவரும் பொருளாதார அரசியல் காரணிகளை விமர்சனமாக முன்வைக்கவில்லை. நேரடி அரசியல் விமர்சனமாக முன்வைக்காமல் அதன் பின்னணிகளும் விமர்சிக்கப்படுகிறது. 1970 களில் இவரது இந்த மூன்று படைப்புக்களும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

இந்த மூன்று படங்களும், இதில் குறிப்பிட்ட ஏனைய படங்களும் N.N.Video, Photo Past, S.K. Video (Ellesmere & Birchmount) பெற்றுக்கொள்ளலாம். அடுத்த இதழில் இவரது மற்றைய படைப்புக்கள் பற்றிய விபரங்கள் இடம்பெறும்.

திருத்தம்: கடந்த இதழின் தலைப்பு "Shame on You" செயல் வீரரும்.




# கிடைத்தற்கரிய பொக்கிஷம்

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



எங்கு அன்பு பிரசன்னமாயிருக்கின்றதோ அங்கு அன்பின் சகல நலன்களும் அத்துடன் ஒன்றுகூடிப் பிரசன்னமாகி இருக்கும் எனும் உண்மையைப் புரிந்து கொண்டதும் நான் அன்பை உணர்ந்து கொள்வேன்.

ஆம்! எங்கும் ஊடுருவியிருக்கும் இறைசக்தியைப் போல எங்கும் நிறைந்தி ருக்கும் அன்பின் குரல் எப்பொழுதும் உன்னை அழைத்துக் கொண்டேயிருக் கின்றது. "உனக்காகத்தான் நான் இங்கிருக் கின்றேன். எந்த நிலையில் இருந்தாலும் உன்னை நீ உள்ளபடியே ஏற்றுக்கொள் கின்றேன்." என்று ஒவ்வொரு கணமும் ஆதரவுடன் மெதுவாக மென்மையான குரலில் உங்கள் இதயத்திற்கு கிசுகிசுத்து நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது அன்பு. நீ விரும்பும் அனைத்தையும், உனக்குத் தேவையான யாவற்றையும் உனக்குக் கொடுக்க வல்லது அன்பு. எவ்வளவு அருமையான, உயர்ந்த பொக்கிஷம் நீ என்பதை நன்கு உணர்ந்தபடியால் தான், அன்பு இவை எல்லாவற்றையும் உனக்குக் கொடுக்க விரும்புகின்றது. ஆனால் எவ்வளவு சிறந்த பொக்கிஷம் அன்பு என்பதை நீ உணர்கின்றாயா? உனக்கு இவற்றையெல்லாம் கொடுக்க விரும்பு கின்றதே அன்பு என்பது உனக்குப் புரிகின்றதா?

உன்னை அரவணைத்து, ஆறுதலளித்து உயர்த்த விரும்புகின்றது அன்பு. அன்பிற்கு உன்னை நன்றாகத் தெரியும். நீ எவற்றை யெல்லாம் வாழ்விற்குக் கொடுக்க வேண்டும் என்பது அன்பிற்கு நன்கு தெரியும். அதிலும் மிக முக்கியமானது என்ன தெரியுமா? அன்பை பெற நீ ஒரு வேலையும் செய்யத் தேவையில்லை! உன்னையே நீ உயர்த்திக் கொள்ளச் செய்ய வேண்டியவற்றை மட்டுந்தான் செய்யச் சொல்லி அன்பு உன்னைக் கேட்கின்றது. உனது இதயத்தை அன்பால் நிரப்பு. உனது மனதை, உன் சிந்தனையை மேம்படுத்து. உனது நடத்தையைக் கண்காணித்துக் கொள். அன்பு தான் உனக்குத் துன்பம், குழப்பம், தோல்வி யாவற்றையும் தருகின்றது எனும் உனது பிழையான நம்பிக்கையைத் தகர்க்க முயற்சி செய். ஆனால் நீ உனது குற்றங்குறைகளை அடையாளங் கண்டு அவற்றைக் தவிர்க்க முயலும் போது கவனமாயிருக்கச் சொல்கின்றது அன்பு! ஏனெனில் "தான்தான் அன்பு", எனப் பொய் வேஷங்கட்டிக்கொண்டு, அன்பு கொஞ்சங் கூட இல்லாதவை எத்தனையோ, உன்னை ஏமாற்றத் தருணம் பார்த்துக் காத்திருக்கின்றன.

உண்மை அன்பு உன்னை ஒருபோதும் கைவிடாது. அவமரியாதை செய்யாது. அன்பு உன்னைத் துரிதப்படுத்தி பிடித்திழுக் காது. உன்னிடமிருந்து எதையும் பறித்துக் கொண்டு போக வராது அது. அட்சய பாத்திரம் போல் அன்பு எப்போதும் உனக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கும். அன்பு உன்னைப் பாதுகாக்கும். உனக்குள்ளிருந்து இறைவனின் குரலாய் உனக்கு இரகசியம் சொல்லும் மனச்சாட்சி தான் அன்பு. எல்லாம் வல்ல ஈஸ்வரன் உன்னை எப்போதும், இப்போதும் நேசிக்கிறார் எனக் கூறுவது அன்பு. நீ எப்படிப்பட்ட நிலையிலிருந்தாலும் சரி, எங்கிருந்தாலும் சரி, என்னதான் பிழைகள் செய்திருந்தாலும் சரி இவை போன்ற வற்றை எனக்குச் சொல். உனக்கு எங்கு வலிக்கின்றது, ஏன் வலிக்கின்றது, எப்படி உனக்கு அந்த வலி ஏற்பட்டது என்பவை யாவற்றையும் தனக்குச் சொல்லி ஆறுதலடையும்படி கேட்கின்றது அன்பின் குரல். எப்படி நீ இப்படிக் காயப்பட்டாய், யார் உன்னை இப்படி எதற்காகக் காயப்படுத்தியது. எவ்வளவு காலமாக இப்படி வலியினால் அவஸ்தைப்படுகிறாய் என்பது போன்றவையெல்லாம் பரவாயில்லை என்கின்றது அன்பு. இறைவனின் ஒரு சிறு துளி அருள் உன்னைக் குணமாக்கி விடும் என்பதை நீ புரிந்து கொள் என்கின்றது அன்பு.

அன்பின் குரல்தான், உனக்கு அறைகூவி அழைக்கும் கடவுளின் குரல் என்பதை இன்றுவரை நீ சரிவர உணராது இருந்திருக்கலாம். அன்பைத் தேடிக்கண்டுபிடித்துக் கொள்ள நீ பரபரப்பாய் அலைந்து கொண்டிருக்கும்போது, அன்பு உன்னை அழைக்கும் குரலைக் கேட்க முடியாமல் இருந்திருக்கலாம். இன்று முதல் அன்பின் குரலை கேட்டு அடையாளங் காண அவதானமாக இரு. உன்னைப் பாசத்துடன் கவனித்து, உன்னைத் துன்புறுத்தும் யாவற்றையும் அகற்றி உன்னைக் குணப்படுத்த அன்பு எப்போதும் தயாராக உள்ளது என்பதை விசுவாசத்துடன் இன்று நினைவில் வைத்துக்கொள்.

அன்புச் என்னை அழைத்துப் பேசும் போது கவனித்து, அதை அடையாளங் கண்டு கொள்ளும் முயற்சியில் இன்றுமுதல் நான் ஈடுபடுவேன்.

*மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-624-9617*



**லலிதா புரூடி**


# DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution
Lendingtree.ca



# MANIKKANDAN
## Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்**.

Wedding or any Occasions
Special Deals Available

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு





**இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.**

இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள் மணிகண்டன்.

Call: Siva: 416-283-1260

790 Military Trail , Unit 1A, Scarborough ON M1E 4P7

# காரோடும் வீதிகளில் தேரோடி வருகிறது







கிராமங்களில் நாகரிகம் குறைந்த காலங்களில் தார் போடப்படாத மக்கி ஒழுங்கைகளில் அதாவது கிராமசபை தேர்தல் வரும்பொழுது மட்டும் மாங்காய் எறிந்து விழுத்தும் அளவுகளில் சிறு கல்லு கொண்டு வந்து கொட்டுவார்கள். அந்த நேரம் கார்கள் வீதியால் சென்றால் புழுதி மண்டலம் வீதியை அலங்கரிக்கும். சிறுவர்கள் அந்தக் கார்களின் பின்னால் ஓடுவார்கள். வீதிகள் மேடு, பள்ளமாக இருப்பதால், சார்வேகமாக ஓடாது. ஆனால் சிறுவர்கள் அதைவிட வேகமாக ஓடுவார்கள். இது ஒரு காலம்.



ஆனால் நாகரிக உச்சியில் இன்று வீதிகளில் ஓடும் கார்களைப் பார்க்க முடியாது. ஆனால் இன்று புலம்பெயர்ந்த மண்ணில் பலம் படைத்த தமிழர்கள் சில பழக்கவழக்கங்களை ரத்த சொந்தக்காரர்கள், உறவுமுறைகளை மறந்தாலும் சமய, கலை, கலாசாரத்தை விடவில்லை. ஆடியது மாதமதில் அண்டத்தில் பல விடயம் கோயில்கள் கொடியேறி தேருடனே தீர்த்தம்





சாராதாதேவி, சோமசுந்தரப்புலவர், விவேகானந்தர் பிறந்த தினம் இம்மாதம் என உலகர் என்றோ எழுதிய கவிதைவரிகள் கண்முன் வந்தது. இன்று கனடாவில் ரொறொன்ரோவில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என பல கோவில்கள் வீதிக்கு ஏற்றளவு விசாலமான தேர்கள். அரோகரா சத்தம் அயலட்டையை ஆச்சரியப்படுத்த நத்தை வேகத்தில் ஊர்ந்து செல்லும் வாகனங்கள் தேரோடும் காட்சியை கண்டு ரசிக்க காரோடும் வீதிகளில் தேரோடி வருகிறது.



அரோகரா! அரோகரா! உலகரின் தொண்டை தேர்தல் பிரசாரம் செய்த லிபரல் அபேட்சகர் போல கட்டிவிட்டது. ராசம்மாக்கா, அன்னம்மாக்கா, செக்கண்புளோர் செல்லம்மா பஜனை கோஷ்டியுடன் தோடி ராகத்தில் தேடிவர வரசித்தி விநாயகருக்கு அரோகரா! வரம் தரும் விநாயகருக்கு அரோகரா! பிராங்பேட் பேரம்பலம் கண்ணீர் மல்க அரோகரா! சொல்லிக்கொண்டிருக்க உலகர் அருகே சென்று பேரம்பலம் பேரம்பலம் என அவரை கூப்பிட்டும் பிரங்பேட் பேரம்பலம் திரும்பவில்லை. மாதக் கணக்காக பிராங்பேட் பேரம்பலம் உலகர் வீட்டுப்பக்கம் வரவில்லை. ஊர்ச்சோலி உலகசமாதானம் என வேறு திசையில் கவனம் செலுத்தும் உலகருக்கு ரூபனும் பேரம்பலமும் மோதியது தெரியாது. ரூபனும் ஒருவரிடமும் சொல்லவில்லை. அன்றிலிருந்து பேரம்பலமும் ஒருவரிடமும் சொல்லவில்லை. அரோகரா! அரோகரா! வெயில் கொழுத்தும் வேளையில் என்ன தண்ணீர் துளிகள், சட, சட சத்தம், அரோகரா??



மெக்சிக்கோவிலிருந்து விமானத்தில் வந்த தேங்காய் கெனடிவீதி வரசித்தி விநாயகர் ஆலய முன்றலில் சிதறு சன்னப்பட்டுக்கொண்டிருந்தது. எங்கட சனம் விசர்ச்சனம். வீணா காசை செலவழிக்குது. தேங்காய் அடிக்குது.



வெளிநாட்டிலை வந்தும் தேரிழுக்குதுகள், அவனவன் சந்திரமண்டலத்துக்கு... போறான். உலகர் சடக் என திரும்பினார். பிறிம்லி மீனாவின் கணவன் தான் இதைச் சொன்னது. உலகரின் கையில் மட்டும் மெக்சிக்கோ தேங்காய் இருந்திருந்தால் பிறிம்லி மீனாவின் கணவன் தலையில்தான் உடைபட்டிருக்கும். மனைவியையும் பிள்ளையையும் விட்டு குடியும் கூத்துமாகத் திரிந்துகொண்டு வாழ்வில் பெறமுடியாத சொத்து மனைவியையும் பிள்ளையையும் இழந்துவிட்டு பிறிம்லிமீனாவின் பெற்றோர் கொடுத்த சீதனப்பணத்தையும் சீரழித்துவிட்டு மெக்சிகோ தேங்காய் அடிப்பது மடைத்தனம் என பிரசங்கம் செய்துகொண்டிருந்தவர் உலகரைக் கண்டது அரேகாரா வரசித்தி விநாயகருக்கு அரோகரா என்றதும் பஜனை செய்து கொண்டிருந்த செக்கண்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவின் அருட்கண்களும், அருட்செவிகளும் பார்க்கவும், கேட்கவும் தவறவில்லை.



கனடா டேக்கும், விக்ரோரியா டேக்கும் 1நாளில் குறிப்பிட்ட நிமிடத்தில் நடைபெறும். வானவேடிக்கைக்கும் ஓட்டாவில் நடைபவனி, குதிரைகள் அணிவகுப்புக்கும் எத்தனை ஆயிரக்கணக்கான டொலர் பணம் செலவிடுகிறார்கள் என இதுவரை பலருக்கு தெரியாது.

அரோகரா வரசித்தியானுக்கு அரோகரா வரம்தரும் வரசித்தியானுக்கு அரோகரா எல்லாரையும் வாழ வையப்பா விநாயகனே என யாரோ மனமுருகக் கேட்பது எல்லோருக்கும் கேட்கிறது. எல்லோரும் இன்புற்றிருக்க வேறொன்றாலும் நான. அறியேன் பராபரமே. அரோகரா தேர் நகர்கிறது. உலகர் வயது போய் பலம் குறைந்தாலும் உலகரும் சனத்துக்குள் இடம்பிடித்து வடம் பிடித்து இழுக்கிறார். அரோகரா தேர் நகர்கிறது.

வெளிநாட்டில் வந்தும் கலையையும் சிற்பத்தையும் அனுபவத்தால் வடித்த சிற்பக் கலைஞர் ஜெயராசாவின் கைவண்ணத்தில் ஊருவான தேர் விநாயகரைத் தாங்கி நகர்கிறது. பிறிம்லி மீனாவும் மகனும் பஜனைக் கோஷ்டியுடன் சேர்ந்து “துதிப்போக்கு வல்வினை போம் துன்பம் போம்” என மனமுருகிப்பாட அருகில் நின்றவர்களின் கண்களில் நீர் மல்கியது. அரோகரா! அரோகரா!

112

நகைச்சுவைத் தொடர்

## ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்


## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் **நந்தா**





**Nantha Aiyadurai**, B.Eng.

Sales Rep.

**Office :** 613.823.7555

**Cell :** 613.866.9931

**Toll Free :** 1 800 472.6512

COLDWELL BANKER

Coldwell Banker Coburn Realty

# MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*





*LOW - LOW RATES AVAILABLE.*
*TO GET BEST RATE IN TOWN*
*PL. CALL: ANIL JOSHI*

For more information call:

Anil Joshi at

416.888.1072



# யோகாசனமும் அதன் பயன்களும்

## பத்மாசனம்



செயல்முறை:

தயார் செய்யப்பட்ட விரிப்பில் கால்களை நீட்டி உட்கார்ந்து வலது காலை மடக்கி - இடது அடித்தொடையிலும் பின்பு இடதுகாலை மடக்கி வலது அடித்தொடையிலும் வைத்து முதுகுத் தண்டு கோணாமல் நிமிர்ந்து உட்கார்ந்து கையை சின்முத்திரையில் வைத்து அந்தந்தப் பக்கத்து முழங்கால் மேல் உள்ளங்கை இருக்குமாறு வைத்து, கண்பார்வை நாசி நுனியில் இருக்குமாறு செய்ய வேண்டும். அப்போது சுவாசம் இயல்பாக இருக்க வேண்டும். ஆரம்பப் பயிற்சியாளர்கள் 15விநாடிகள் இருந்தால் போதுமானது. நல்ல அனுபவம் உள்ளவர்கள் சுகமாக இருக்கும்வரை தொடரலாம். இதுபோல் இடதுகாலை மாற்றி அவசியம் செய்ய வேண்டும்.

பயன்கள்:

ஆசனங்களில் உடலுக்கும், மனதுக்கும், ஆன்மாவுக்கும் ஒரே நேரத்தில் பயனளிக்கக் கூடிய மிக உன்னதமான ஆசனம் பத்மாசனம். அன்பர்களே! இந்த இடத்தில் ஓர் உண்மையைச் சொல்கிறேன். பத்மாசனம் என்றாலே அது இந்து மதத்தையே சார்ந்தது என்று

**ஆசனங்களில் உடலுக்கும், மனதுக்கும், ஆன்மாவுக்கும் ஒரே நேரத்தில் பயனளிக்கக் கூடிய மிக உன்னதமான ஆசனம் பத்மாசனம்.**

பலர் நினைக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. பொதுவாக எந்த நாட்டவர் எந்த மதத்தவர் ஆனாலும் அவரவர்களுக்கு உகந்த மத கலாசாரப்படி இந்த ஆசனத்தைச் செய்யலாம். மனித சமுதாயம் முழுமைக்கும் பயன்படும் ஆசனம் இது. எந்த மதத்தையும் குறிப்பிடாது. மனித ஆரோக்கியத்தையே முக்கியமாகக் கொண்டது. இறை நம்பிக்கை இல்லாதவர்களும் ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாசனத்தை செய்து வரலாம். இது தியான ஆசனங்களில் ஒன்று குதிக்கால் வலி, இடுப்புப்பிடிப்பு, நரம்பு சம்பந்தமான நோய்கள் நீங்கும். ஜீரணக் கோளாறு, அடிவயிற்றுப் பிரச்சினைகள் சரியாகும். ஆழ்ந்த



சுவாசம் கிடைக்கும். சந்திரக்கலை, சூரியக்கலை மூச்சோட்டம் உணர ஏதுவாக இருக்கும். பிராணாயாமத்தில் பலவகைகளைப் பயிற்சி செய்ய சிறந்த ஆசனம்.

## வஜ்ஜிராசனம்

செயல்முறை

விரிப்பில் முழங்காலை மடக்கி மண்டியிட்டு உட்காரவும். முழங்கால் நன்கு தரையில் படிந்திருக்க வேண்டும். வலது கை வலது முழங்காலிலும் இடது கை இடது முழங்காலிலும் வைத்து உடலை நிமிர்த்திய நிலையில் இருக்க வேண்டும். இது ஒரு தியான ஆசனம் தான்.

பயன்கள்

மிக எளிமையான ஆசனமாக இருந்தாலும் பயன் அதிகம். ஜீரண

**எல்லா ஆசனமும் சாப்பிட்ட உடனேயே செய்யக்கூடாது. ஆனால், இந்த ஓர் ஆசனம் மட்டும் சாப்பிட்ட உடனேயே செய்யலாம்.**

உறுப்புக்கள் நிரம்ப இயங்கும். மன உறுதியைத் தரும். எல்லா ஆசனமும் சாப்பிட்ட உடனேயே செய்யக்கூடாது. ஆனால், இந்த ஓர் ஆசனம் மட்டும் சாப்பிட்ட உடனேயே செய்யலாம். ஆகவே ஜீரணக் கோளாறுகள் வராமல் இருக்கும். அஜீரணத்தைப் போக்கும், வாயுத்தொல்லை நீங்கும்.

தொடரும்


NTE AUTO

New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை

ஈழத்தமிழ் மகன்

**சோதீஸ்**

இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



**இம்மாத** Special

*2.2% Financing*

*Honda Certified Used Vehicles*

416-704-1179

**அலுவலக நேரம்**

Mon., Fri., Sat.: 9:00 am - 6:00 pm

Tues., Wed.: 12 noon - 9:00 pm

4334 Kingston Rd, Scarborough





# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers to Tutorial 149 — July 15, 04

**Ans. 1.** since there are 7 days in a week and 98 = 7 x 14, it will be wednesday on the 98th day. Therefore it is Friday on the 100th day.

**Ans. 2.** The digit on the clock will next be identical at 11:11. That is after 316 minutes. [ 6.66, 7.77 etc are not possible]

**Ans. 3.** 3 liters of chocolate in 60 liters = 3/60 x 100 = 5%.

**Ans. 4.** px + 2y = 7 --------(1) 3x + 9y = 5 ----------(2)
(i). 5; (ii) x 7
5px + 10y = 35 21x + 7qy = 35
5p = 21, p = 21/5

## Tutorial - 150

1. At what time between 4 0' clock and 5'o clock the hour hand and the minute hand will be together.

2. In an election Sam received 60% of the votes and John received all the rest. If Sam won by 24 votes, how many people voted.

3. The numbers 49, 29, 9, 40, 22, 15, 53, 33, 13 , 47 are grouped in pairs so that the sum of each pair is the same. Which number is paired with 15.

4.In a convex polygon, exactly five of the interior angles are obtuse. What will be the largest number of sides this polygon can have.

5. In how many ways can four men and four girls be seated around a circular table if each must be flanked by two girls.

BY. MR. S.F.XAVIER (Teacher) TEL: 416-431-6774

## "ஆம்! ஸ்பானியக் காதாலி எனக்கு இருக்கிறாள்" ராகுல் காந்தி பகிரங்க அறிவிப்பு




